முன்னுரை

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய நிருபங்களைப் பொதுவாக சபைகளுக்கு எழுதுவது வழக்கம். ஆனாலும் அவர் ஒரு சில நிருபங்களை தனிநபர்களுக்கும் எழுதியிருக்கிறார். தீமோத்தேயுவுக்கு இரண்டு நிருபங்களும், தீத்துவுக்கு ஒரு நிருபமும், பிலேமோனுக்கு ஒரு நிருபமும் எழுதியிருக்கிறார். தீமோத்தேயுவும் தீத்துவும் சுவிசேஷ ஊழியர்கள். இவர்களுடைய ஊழியம் அப்போஸ்தலருடைய ஊழியத்தைப் போன்றது. தீமோத்தேயு பவுலுடைய ஊழியத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்டிருக்கிறார். ஆகையினால் அவர் தீமோத்தேயுவைப்பற்றிச் சொல்லும் போது "விசுவாசத்தில் உத்தம குமாரன்" என்று குறிப்பிடுகிறார்.

பவுல் தீமோத்தேயுவுக்கு இரண்டு நிருபங்களை எழுதுகிறார். இந்த நிருபங்கள் எழுதப்படும்போது தீமோத்தேயு எபேசுவில் தங்கியிருந்து, அங்கு சுவிசேஷ ஊழியம் செய்கிறார். தீமோத்தேயு தன்னுடைய ஊழியத்தை எவ்வாறு நிறைவேற்றவேண்டுமென்று, பவுல் இவ்விரண்டு நிருபங்கள் மூலமாக, அவருக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

1 அதிகாரம்

முன்னுரை (1தீமோ 1:1-4). நியாயப்பிரமாணத்தைப்பற்றிய விளக்கம் (1தீமோ 1:5-11). பவுல் அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட விதம் (1தீமோ 1:12-17).

முன்னுரை
1தீமோ 1 : 1-4

1தீமோ 1:1. நம்முடைய இரட்சகராயிருக்கிற தேவனும், நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் கட்டளையிட்டபடியே, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்,

1தீமோ 1:2. விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

1தீமோ 1:3. வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும், விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவாயிராமல், தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வம்ச வரலாறுகளையும் கவனியாதபடிக்கும், நீ சிலருக்குக் கட்டளையிடும் பொருட்டாக.

1தீமோ 1:4. நான் மக்கெதோனியாவுக்குப் போகும்போது உன்னை எபேசு பட்டணத்திலிருக்க வேண்டிக் கொண்டபடியே செய்வாயாக.

அப்போஸ்தலர் பவுல் தான் எழுதுகிற நிருபங்களில், தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்" என்று பொதுவாகச் சொல்லுகிறார். பவுலுடைய அப்போஸ்தல ஊழியம் தேவனுடைய சித்தத்தினால் உண்டாயிற்று. தேவன் தாமே பவுலை அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். பவுலின் அப்போஸ்தல ஊழியத்தைக் குறித்து யாரும் கேள்வி கேட்க முடியாது. நம்முடைய இரட்சகராயிருக்கிற தேவன் கட்டளையிட்டபடியே பவுல் அப்போஸ்தலனாயிருக்கிறார். அத்துடன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் பவுலை அப்போஸ்தலனாயிருக்கும்படி கட்டளை கொடுத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து நம்முடைய நம்பிக்கையாயிருக்கிறார். நம்முடைய விசுவாசத்திற்கு அவரே ஆதாரம். நம்முடைய நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கையெல்லாம் இயேசுகிறிஸ்துவின் மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவை தன்னுடைய குமாரனென்று குறிப்பிடுகிறார். பவுல் தீமோத்தேயுவை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தினவர். அவர் பவுலுக்கு விசுவாசத்தில் உத்தம குமாரன். பவுல் தீமோத்தேயுவை கர்த்தருக்குள் பெற்றெடுத்திருக்கிறார். அவரைத் தன்னுடைய சொந்த குமாரன் போல பாவித்து அவருக்கு ஆவிக்குரிய புத்திமதிகளைச் சொல்லுகிறார். பவுல் எல்லாவிதத்திலும் தீமோத்தேயுவுக்கு ஆவிக்குரிய தகப்பனாயிருக்கிறார்.

தீமோத்தேயுவும் பவுலிடத்தில் அன்பாகப் பழகுகிறார். ஒரு மகன் தன் தகப்பனுக்கு கொடுக்கவேண்டிய சகல மரியாதைகளையும் தீமோத்தேயு பவுலுக்குக் கொடுக்கிறார். பவுலுக்கு யாருடைய உதவியும் தேவையில்லை. மனுஷருடைய உதவியை எதிர்பார்த்து பவுல் ஊழியம் செய்யவில்லை. பவுல் தன் ஊழியத்தில் ஒருபோதும் எந்த ஒரு மனுஷனையும் சார்ந்திருக்கவில்லை. ஆனாலும் தீமோத்தேயு பவுலை ஒரு தகப்பனைப்போல கவனிப்பது, அவருக்கு மிகுந்த ஆறுதலாயிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய நிருபங்களெல்லாவற்றிலும் அப்போஸ்தல ஆசீர்வாதம் சொல்லுவது வழக்கம். அவர் சபைகளுக்கு எழுதின நிருபங்களில், சபையாருக்கு "கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" என்று சொல்லுவது வழக்கம். தீமோத்தேயுவுக்கு அவர் எழுதின இரண்டு நிருபங்களிலும், தீத்துவுக்கு எழுதின நிருபத்திலும் "கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக" என்று சொல்லுகிறார்.

ஊழியக்காரர்களுக்கு தேவனுடைய கிருபையும் இரக்கமும் தேவைப்படுகிறது. இவை விசுவாசிகளுக்கும் தேவைப் படுகிறது. ஆனாலும் விசுவாசிகளைவிட ஊழியக்காரர்களுக்கு தேவகிருபையும் இரக்கமும் மிகவும் அதிகமாய்த் தேவைப் படுகிறது. கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்த தீமோத்தேயுவுக்கே தேவகிருபையும் இரக்கமும் தேவைப்படும் போது, இக்காலத்தில் அவருடைய ஊழியத்தைச் செய்து வருகிற அப்பிரயோஜனமான ஊழியக்காரராகிய நமக்கு கிருபையும் இரக்கமும் அதிகமாய்த் தேவைப்படும் (1தீமோ 1:2).

தீமோத்தேயு எபேசுவிலே சுவிசேஷ ஊழியம் செய்து வருகிறார். அவருடைய ஊழியத்தை எப்படி செய்யவேண்டுமென்று பவுல் அவருக்கு ஆலோசனை சொல்லுகிறார். பவுல் ஊழியக்காரருக்கும் ஆலோசனை சொல்லுகிறார். சபையாருக்கும் புத்திசொல்லுகிறார். ஊழியக்காரர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை மாத்திரமே போதிக்க வேண்டும். அவர்கள் வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கக்கூடாது (1தீமோ 1:3). கிறிஸ்துவின் உபதேசத்தோடு நாம் எதையும் கூட்டக்கூடாது. கிறிஸ்துவின் உபதேசத்தைப் புரட்டக்கூடாது. சத்தியத்தை உண்மையாய் அறிவிக்கவேண்டும்.

அப்போஸ்தலருடைய காலத்தில் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு விரோதமாக ஒரு சிலர் போதகம் பண்ணினார்கள். அவர்கள் வேற்றுமையான உபதேசங்களைப் போதித்தார்கள். கள்ளப்போதகர்கள் மூலமாய் சபையில் பிரச்சனை உண்டாயிற்று. ஆகையினால் வேற்றுமையான உபதேசங்களை யாரும் போதிக்கக்கூடாது என்று தீமோத்தேயுவுக்கு கட்டளை கொடுப்பது பவுலுக்கு அவசியமாயிற்று.

தீமோத்தேயுவும் வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கக்கூடாது. அது மாத்திரமல்ல மற்ற ஊழியக்காரர்களும் வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கக்கூடாது என்று தீமோத்தேயு அவர்களுக்குக் கட்டளை கொடுக்கவேண்டும். விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவாயிருக்கிற உபதேசங்களை மாத்திரமே ஊழியக்காரர்கள் போதிக்கவேண்டும்.

எபேசு சபையிலுள்ள ஊழியக்காரர்களில் சிலர் தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும், முடிவில்லாத வம்சவரலாறுகளையும் போதிக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தைப் போதிக்காமல் வேற்றுமையான உபதேசத்தைப் போதிக்கிறார்கள். இதனால் யாருக்கும் பக்திவிருத்தி உண்டாகவில்லை. சபையில் சந்தேகத்தைக் கொடுக்கிற விவாதங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்போது, சபை வளர்ச்சி பெறாது. விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் வளர்ச்சி பெறமாட்டார்கள். ஆகாத சம்பாஷணைகளும், தேவையில்லாத விவாதங்களும், தர்க்கங்களும், சபைகளைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, அவற்றை அழித்துப்போடும்.

விசுவாசிகளுக்கு தெய்வீக பக்திவிருத்தி உண்டாகவேண்டும். விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் போஷிக்கப்பட்டு வளர்ச்சி பெறவேண்டும். இதை மனதில் வைத்தே ஊழியக்காரர்கள் கிறிஸ்துவின் சத்தியத்தை உண்மையாய்ப் போதிக்கவேண்டும். தெய்வீக பக்திவிருத்தி விசுவாசத்தினால் மாத்திரமே விளங்கும். நாம் முதலாவதாக விசுவாசத்தினாலேயே தேவனிடத்தில் வந்தோம். நாம் விசுவாசத்தினால்தான் தேவனிடத்தில் நிலைத்திருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியும் விசுவாசத்தினால்தான் உண்டாக வேண்டும். நம்முடைய தெய்வீக பக்திவிருத்திக்கும் விசுவாசமே ஆதாரமாயிருக்கவேண்டும்.

ஊழியக்காரர்கள் பொதுவாக தர்க்கங்களை உண்டுபண்ணுகிற காரியங்களைப் பேசக்கூடாது. யாராவது இப்படிப்பட்ட காரியங்களைப் பேசினாலும் ஊழியக்காரர்கள் அதைக் கவனமாய்த் தவிர்த்துவிடவேண்டும். சில சமயங்களில் மெய்யான சத்தியத்தைப்பற்றி தர்க்கம்பண்ணும்போதுகூட, நல்ல விளைவுகள் ஏற்படாமல், தீயவிளைவுகளே ஏற்படுகிறது. தர்க்கம்பண்ணுவதினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகப் போவதில்லை.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு விசுவாசத்தினால் கீழ்ப்படிந்ததாகயிருக்க வேண்டும். விசுவாசத்தினால் கர்த்தரை நோக்கிப்பார்த்து ஜீவிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளை விசுவாசத்தினால் பின்பற்றிச் செல்லவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விசுவாசமே ஆதாரம். விசுவாசமே நமக்கு உதவி செய்யும். தர்க்கங்களும் கட்டுக்கதைகளும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆதாரமல்ல. அவை நமக்கு ஒருபோதும் உதவியாயிருப்பதில்லை (1தீமோ 1:3).

நியாயப்பிரமாணம்
1தீமோ 1 : 5-11

1தீமோ 1:5. கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே.

1தீமோ 1:6. இவைகளைச் சிலர் நோக்காமல் வீண்பேச்சுக்கு இடங்கொடுத்து விலகிப் போனார்கள்.

1தீமோ 1:7. தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள்.

1தீமோ 1:8. ஒருவன் நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால், நியாயப்பிரமாணம் நல்லதென்று அறிந்திருக்கிறோம்.

1தீமோ 1:9. எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல், அக்கிரமக்காரருக்கும், அடங்காதவர்களுக்கும், பக்தியில்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும் தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலைபாதகருக்கும்.

1தீமோ 1:10. வேசிக்கள்ளருக்கும், ஆண்புணர்ச்சிக்காரருக்கும், மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்யருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும்,

1தீமோ 1:11. நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் நியாயப்பிரமாணத்தையும் தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தையும் விளக்கமாகச் சொல்லுகிறார். தேவனிடத்திலும் மனுஷரிடத்திலும் அன்பாயிருக்கவேண்டும் என்னும் சத்தியத்தை உறுதிபண்ணுவதற்காகவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவே தெய்வீக பிரமாணம். இந்தப் பிரமாணத்திலிருந்து நம்முடைய உபதேசம் வழிவிலகிச் சென்றுவிடக்கூடாது.

கிறிஸ்துவின் சுவிசேஷம் இந்தச் சத்தியத்தைத் தெளிவாய்ப் போதிக்கிறது. நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்கவேண்டும். நம்மை சபிக்கிறவர்களையும் ஆசீர்வதிக்க வேண்டும். நம்மை பகைக்கிறவர்களுக்கும் நன்மை செய்யவேண்டும். நம்மை நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணவேண்டும் (மத் 5:44). இயேசு கிறிஸ்துவின் பிரமாணம் அன்பின் பிரமாணம்.

யூதமார்க்கத்து ரபீமார்கள் நியாயப்பிரமாணத்தில் அதிகமாக கற்றுத் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். நியாயப்பிரமாணத்தில் தங்களுக்கு இருக்கிற அறிவைப்பற்றி பெருமைப்படுகிறார்கள். தேவனிடத்தில் அன்புகூருவதற்கும், மனுஷரிடத்தில் அன்புகூருவதற்கும், நியாயப் பிரமாணத்தை இவர்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்தவில்லை. மனுஷர் மத்தியில் அன்பு விருத்தியடைய வேண்டும். இதுவே நியாயப்பிரமாணத்தின் நோக்கம்.

நியாயப் பிரமாணத்தின் ஆசிரியர்கள் அதன் உள்ளான நோக்கத்தை மறந்துவிட்டு, சுவிசேஷத்திற்கு விரோதமாகப் போதிப்பதிலேயே கவனம் செலுத்துகிறார்கள். சுவிசேஷத்தைத் தடைபண்ணுவதற்கு நியாயப்பிரமாணத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள். சுத்தமான இருதயத்திலும், நல்மனச்சாட்சியிலும், மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே நியாயப்பிரமாணத்தின் பொருள் (1தீமோ 1:5).

நம்முடைய அன்பு சுத்தமான இருதயத்திலிருந்து பிறக்கவேண்டும். நம்முடைய இருதயம் சுத்திகரிக்கப்படவேண்டும். பாவமான அன்பு எதுவும் நம்முடைய இருதயத்தில் காணப்படக்கூடாது. நம்முடைய அன்பு நல்மனச்சாட்சியினால் உண்டாகவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை நாம் உண்மையாய் விசுவாசிக்கும்போது, நம்முடைய விசுவாசம் மாயமற்றதாயிருக்கும். மாயமற்ற விசுவாசமே மெய்யான விசுவாசம். நம்மிடத்தில் சுத்தமான இருதயமும், நல்மனச்சாட்சியும் இருந்தால் மாத்திரமே, நம்முடைய விசுவாசம் மாயமற்றதாயிருக்கும் (1தீமோ 1:5).

விசுவாசம் கிரியை நடப்பிக்கும்போது, அதன் கிரியைகள் இயல்பாகவே நன்மை கொடுக்கும். அது சுத்தமாகவும் துப்புரவாகவும் இருக்கும். விசுவாசத்தின் கிரியையில் மாய்மாலம் இருக்காது. நாம் விசுவாசத்தினால் கிரியை செய்யும்போது நம்முடைய மனச்சாட்சியும் சுத்தமாயிருக்கும்.

ஒரு சிலர் அன்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அன்பு இல்லாமல் நியாயப்பிரமாணம் இல்லை. ஆனால் இவர்களோ அன்பையும் நியாயப்பிரமாணத்தையும் தனித்தனியாகப் பிரித்து, அன்பை நோக்கிப் பார்க்காமல், நியாயப்பிரமாணத்தை மாத்திரம் நோக்கிப் பார்க்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் வீண்பேச்சுக்கு இடங்கொடுத்து சத்தியத்திலிருந்து விலகிப்போய்விடுவார்கள்.

நாம் சத்தியத்திற்கு நேராக நடக்கவேண்டும். நம்முடைய இருதயம் சுத்தமாயிருக்கவேண்டும். நம்மிடத்தில் நல்மனச்சாட்சி இருக்கவேண்டும். தேவனிடத்தில் அன்புகூர வேண்டுமென்பதும், மனுஷரிடத்தில் அன்புகூரவேண்டுமென்பதுமே நம்முடைய நோக்கமாயிருக்கவேண்டும். இதுவே தேவனுடைய வழி. நாம் தேவனிடத்திலும் மனுஷரிடத்திலும் அன்புகூரவில்லையென்றால், கர்த்தரின் பாதையிலிருந்து வழிவிலகிப்போய்விடுவோம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வீண்பேச்சுக்கு இடங்கொடுக்கக்கூடாது. வீண்பேச்சு மாய்மாலம்பண்ணும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் வீண்பேச்சுக்கு இடங்கொடுக்காமல், தேவனுடைய வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதை மாத்திரமே பிரசங்கம்பண்ணவேண்டும். வீண்பேச்சினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகப்போவதில்லை (1தீமோ 1:6). வீண்பேச்சு பேசுகிறவர்களுக்கு தாங்கள் சொல்லுகிறது இன்னதென்று தெரியாது. தாங்கள் எதைச் சாதிக்கப்போகிறோம் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஆனாலும் அவர்கள் நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள் (1தீமோ 1:7).

யூதர்கள் நியாயப்பிரமாணத்தை நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாகப் பயன்படுத்துகிறார்கள். நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினால் நாம் நீதிமானாக்கப்பட முடியும் என்று சொல்லி, நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாகப் போதிக்கிறார்கள். ஒருவன் நியாயப் பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால் நியாயப்பிரமாணம் நல்லதுதான் (1தீமோ 1:8). நியாயப்பிரமாணத்தில் தப்பு ஒன்றுமில்லை. அதில் கெட்டது ஒன்றுமில்லை. அது நல்லதுதான். ஆனால் நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அநுசரிக்கவேண்டும். இதை நியாயப்படி அநுசரிக்கும்போது, இது நம்முடைய ஜீவனுக்கு நன்மை செய்கிற பிரமாணமாகயிருக்கும். இது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பிரயோஜனமுள்ள பிரமாணமாயிருக்கும்.

எது பாவம் என்றும், எது நம்முடைய கடமை என்றும் நமக்குக் கற்றுக்கொடுப்பது நல்லது. சத்தியத்தைக் கற்றுக்கொள்வதினால் நம்முடைய இருதயம் சுத்தமடைவதில்லை. சத்தியத்திற்கு கீழ்ப்படிந்தால் மாத்திரமே நாம் சுத்தமாயிருப்போம். நியாயப்பிரமாணத்தைப்பற்றி நமக்கு அறிவு இருப்பதினால் நாம் பரிசுத்தவான்களாவதில்லை. தேவனுடைய கிருபையே மனுஷருடைய இருதயத்தை மாற்றுகிறது. நியாயப்பிரமாணத்தை நாம் நியாயப்படி அநுசரிக்கவில்லையென்றால், அது நமக்கு பயங்கரமான பிரமாணமாகயிருக்கம். நியாயப்பிரமாணம் நம்முடைய கைகளையும் நாவையும் கட்டிப்போட்டு அடிமைப்படுத்தும்.

நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படவில்லை. அது அக்கிரமக்காரருக்கு விதிக்கப் பட்டிருக்கிறது. பாவிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் பவுல் நியாயப்பிரமாணம் யாருக்கெல்லாம் விதிக்கப்பட்டிருக்கிறது என்று அட்டவணையாகச் சொல்லுகிறார். நியாயப்பிரமாணம் "அக்கிரமக் காரருக்கும், அடங்காதவர்களுக்கும், பக்தியில்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும் தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலைபாதகருக்கும். வேசிக்கள்ளருக்கும், ஆண்புணர்ச்சிக்காரருக்கும், மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்யருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும்" (1தீமோ 1:9,10) விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது.

சுவிசேஷம் மகிமையானது. சுவிசேஷத்தில் தேவனுடைய மகிமையும், அவருடைய கிருபையும் வெளிப்படுகிறது. சிருஷ்டிப்பு, சிருஷ்டிகளைப் பராமரிப்பது ஆகிய எல்லா கிரியைகளிலும் தேவனுடைய மகிமை வெளிப்படுகிறது. இவையெல்லாவற்றையும் விட, சுவிசேஷத்தில் தேவனுடைய கிருபை அதிகமாய் வெளிப்படுகிறது. சுவிசேஷத்தின் மூலமாய், தேவனுடைய கிருபை, இயேசுகிறிஸ்துவின் முகத்தில் பிரகாசிக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் சுவிசேஷத்தைப்பற்றிச் சொல்லும்போது, “நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷம்” (1தீமோ 1:11) என்று சொல்லுகிறார். கிறிஸ்துவின் சுவிசேஷம் பவுலுக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அது அவருக்கு மிகப்பெரிய மகிமையாகவும், மேன்மையாகவும் இருக்கிறது. தேவன் தன்னிடத்தில் சுவிசேஷத்தை ஒப்புவித்து, தனக்கு மிகப்பெரிய சிலாக்கியத்தை காண்பித்திருப்பதாக பவுல் நினைவு கூருகிறார். தேவன் தம்முடைய ஊழியக்காரர்களிடத்தில் தம்முடைய சுவிசேஷத்தை நம்பி ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தருடைய நம்பிக்கைக்கு நாம் பாத்திரவான்களாயிருக்க வேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பயபக்தியோடும், உண்மையோடும் பிரசங்கம்பண்ணவேண்டும்.

ஊழியத்திற்கு ஏற்படுத்தினார் 1தீமோ 1 : 12-17

1தீமோ 1:12. என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.

1தீமோ 1:13. முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்.

1தீமோ 1:14. நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று.

1தீமோ 1:15. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்.

1தீமோ 1:16. அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம்பெற்றேன்.

1தீமோ 1:17. நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தன்னிடத்தில் தம்முடைய ஊழியத்தை ஒப்புவித்ததற்காக, பவுல் அவரை நன்றியோடு துதிக்கிறார். இயேசு கிறிஸ்துவே பவுலை ஊழியத்திற்கு ஏற்படுத்தியிருக்கிறார். பவுலை மாத்திரமல்ல, எல்லா ஊழியக்காரர்களையும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே ஊழியத்திற்கு ஏற்படுத்துகிறார். ஊழியம் கிறிஸ்துவினுடையது. ஊழியக்காரர்கள் தங்களைத் தாங்களே ஊழியக்காரர்களாக ஆக்கிக்கொள்ள முடியாது. அதுபோலவே ஊழியக்காரர்கள் ஊழியக்காரர்களை உற்பத்தி பண்ணவும் முடியாது. ஊழியக்காரர்களை ஏற்படுத்துவது கிறிஸ்துவின் ஊழியம். கிறிஸ்துவானவரே நம்மை ஊழியத்திற்கு ஏற்படுத்துகிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவரை ஊழியத்திற்கு ஏற்படுத்தும்போது, அவரே அந்த நபரை ஊழியத்திற்காகத் தகுதிப்படுத்துகிறார். நம்மை ஊழியத்திற்கு ஏற்படுத்துகிறவரும், ஊழியத்திற்குத் தகுதிப்படுத்துகிறவரும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே.

தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு, இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரருக்கு தாலந்துகளைக் கொடுக்கிறார். கிருபைகளைக் கொடுக்கிறார். ஊழியத்தை உண்மையாய்ச் செய்வதற்கு ஞானத்தையும் விவேகத்தையும் கொடுக்கிறார். தாலந்துகளை மாத்திரமல்ல, அவர் தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு நமக்கு விசுவாசத்தையும் கொடுக்கிறார். தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு கிறிஸ்து நம்மை உண்மையுள்ளவரென்று எண்ணியிருக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் நம்முடைய அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்துகொள்ளவேண்டும். கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள ஊழியக்காரர்களாய் ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு நமக்குக் கிடைத்திருக்கிற அழைப்பு மிகப்பெரிய சிலாக்கியம் (1தீமோ 1:12).

அப்போஸ்தலர் பவுல், தான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக, தன்னுடைய பாவமான ஜீவியத்தை இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறார். பவுலைப்போலவே ஏராளமான ஊழியக்காரர்கள், இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக தேவனுக்கு விரோதமாக ஜீவித்திருக்கிறார்கள். நாம் பாவிகளாகயிருக்கையிலேயே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மைத் தேடிவந்தார். நம்மை நேசித்தார். நாம் இரட்சிக்கப்படுவதற்காக, கல்வாரி சிலுவையில் தம்முடைய திருஇரத்தத்தைச் சிந்தி, தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார்.

நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக, எவ்வளவு பெரிய பாவிகளாகயிருந்தாலும், கர்த்தர் நம்மை தம்முடைய ஊழியத்திற்கு ஏற்படுத்தும்போது, அவருடைய ஊழியத்தைச் செய்வதற்கு நமக்குத் தடையேதுமில்லை. ஏனெனில் கர்த்தர் தாமே நம்மை உண்மையுள்ளவர்கள் என்று எண்ணி, தம்முடைய ஊழியத்திற்கு நம்மை ஏற்படுத்தியிருக்கிறவர். நம்முடைய மனந்திரும்புதல் உண்மையானதாக இருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழிய அழைப்புக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

நம்முடைய பழைய பாவஜீவியத்திலிருந்து நாம் உண்மையாய் மனந்திரும்பும்போது, மறுபடியும் பழைய பாவஜீவியத்திற்கு திரும்பிப்போகமாட்டோம். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். அவர் நம்மையும் இரட்சித்திருக்கிறார். இதை நினைவுகூர்ந்து, கர்த்தரை ஸ்தோத்திரம்பண்ணுவதற்காக, நம்முடைய பழைய பாவஜீவியத்தையும், நம்முடைய தற்போதைய இரட்சிப்பின் அனுபவத்தையும் சாட்சியாகச் சொல்லுகிறோம். இந்த அடிப்படையில்தான் அப்போஸ்தலர் பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக, தான் வாழ்ந்த பழைய ஜீவியத்தை இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறார்.

இரட்சிக்கப்படும் முன்னே அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் தூஷித்தார். கர்த்தருடைய பரிசுத்தவான்களை துன்பப்படுத்தி கொடுமை செய்தார். இந்தப் பாவங்களையெல்லாம் பவுல் அறியாமல் அவிசுவாசத்தினால் செய்தார். ஆகையினால் கர்த்தருடைய சமுகத்தில் இரக்கம் பெற்றார்.

நாமும் அறியாமல் செய்த பாவங்களுக்கு தேவனுடைய சமுகத்தில் இரக்கம் பெற்றுக்கொள்ளலாம். ஆனாலும் பாவத்தை அறிந்துசெய்தாலும், அறியாமல் செய்தாலும், அது தேவனுடைய சமுகத்தில் பாவமாகவே நியாயந்தீர்க்கப்படும்.

ஒரு சிலர் அறியாமலேயே, துன்மார்க்கமான காரியங்களை துணிகரமாகச் செய்துவிடுவார்கள். தாங்கள் செய்வது பாவம் என்பதுகூட அவர்களுக்குத் தெரியாது. தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து இயேசுகிறிஸ்துவின் சமுகத்தில் விண்ணப்பம் செய்தால், அவர் தங்களை மன்னிப்பார் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் கர்த்தராகவும், இரட்சிகராகவும் விசுவாசிப்பதில்லை.

அறியாமல் பாவம் செய்வதற்கு அவிசுவாசமே அடிப்படை காரணம். அப்போஸ்தலர் பவுலும் இயேசுகிறிஸ்துவை கர்த்தராகவும், இரட்சகராகவும் விசுவாசிக்கவில்லை. அவர் அவிசுவாசத்தினால், அறியாமையினால் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகவும், அவருடைய பரிசுத்தவான்களுக்கு விரோதமாகவும் பாவம் செய்தார். தான் செய்த பாவங்களை கர்த்தருடைய சமுகத்தில் அறிக்கை செய்தார். தான் செய்த பாவங்களுக்காக மனம்வருந்தினார். பாவங்களிலிருந்து மனந்திருந்தினார். கர்த்தர் அவருக்கு இரக்கம் காண்பித்தார் (1தீமோ 1:13).

இயேசுகிறிஸ்துவின் கிருபை பவுலிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று (1தீமோ 1:14). கிறிஸ்துவினுடைய கிருபை அவருடைய சுவிசேஷத்திலும் வெளிப்படுகிறது. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். இதுவே சுவிசேஷத்தின் மொத்த சாரம். இதுவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுக்குலத்தார் எல்லாருக்கும் கொடுக்கிற நற்செய்தி. இந்த வார்த்தை உண்மையாயிருக்கிறது. சுவிசேஷம் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமாயிருக்கிறது (1தீமோ 1:15).

சுவிசேஷம் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமாயிருக்கிறது என்பதை நாம் விசுவாசத்தோடு சொல்லவேண்டும். பவுல் பாவிகளில் பிரதான பாவியாகயிருக்கிறார். தன்னுடைய பழைய பாவஜீவியத்தை மனத்தாழ்மையோடு அங்கீகரிக்கிறார். அவர் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக கிறிஸ்துவைத் தூஷித்தவர். கர்த்தருடைய பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்தியவர். கொடுமைப்படுத்தியவர். கர்த்தருடைய பிள்ளைகளை கொடுமைப்படுத்துகிறவர்கள் பாவிகளிலும் பிரதான பாவிகளாகயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாவிகளில் பவுலும் ஒரு பாவியாகயிருந்தார்.

அப்போஸ்தலர் பவுல் இதற்கு முன்பு தன்னைப்பற்றிச் சொல்லும் போது "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான்" (எபே 3:8) என்று சொன்னார். தன்னை ஒரு பரிசுத்தவானாக பாவித்தார். ஆனால் இப்போதே தன்னைப்பற்றிச் சொல்லும் போது "பாவிகளில் பிரதான பாவி நான்" என்று தன்னைத் தாழ்த்துகிறார். பாவிகளில் பிரதான பாவியாகயிருக்கிறவர்கள் கூட, பரிசுத்தவான்களில் பிரதான பரிசுத்தவான்களாக மாறமுடியும். இது ஒரு விசுவாச வார்த்தை. கர்த்தரின் கிருபை, கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடும்கூட பவுலிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று (1தீமோ 1:14). நாம் பாவிகளாகயிருந்தாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்.

இரட்சிக்கப்படுவதற்கு முன்பு அப்போஸ்தலர் பவுல் பிரதான பாவியாகயிருந்ததுபோல, இக்காலத்திலும் ஏராளமானோர் பாவிகளாகயிருக்கிறார்கள். பிரதான பாவியாகயிருந்த பவுல் இப்போது கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியம் செய்கிறார். பாவியாகயிருந்த பவுலை இயேசுகிறிஸ்து பரிசுத்தவானாக மாற்றியிருக்கிறார். பவுலைப்போல நாமும் பாவியாகயிருக்கலாம். ஆனாலும் நம்முடைய கிறிஸ்துவானவர் நம்மையும் பரிசுத்தவானாக்குவார் என்பதற்கு, பவுலின் ஜீவியம் திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறது.

நாம் நித்திய ஜீவனை அடைய வேண்டுமென்றால் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருக்க வேண்டும். அப்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய இரக்கத்தினால், நம்மீது நீடிய பொறுமையைக் காண்பித்து நம்மை இரட்சிப்பார். பவுல் பிரதான பாவியாகயிருந்தாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு, பவுல் இரக்கம் பெற்றிருக்கிறார் (1தீமோ 1:16).

பவுலைப்போலவே நாமும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தூஷித்திருக்கலாம். அவருடைய சுவிசேஷத்திற்கு விரோதமாகவும், அவருடைய பரிசுத்தவான்களுக்கு விரோதமாகவும் நாம் தீங்கு செய்திருக்கலாம். கர்த்தருடைய பரிசுத்தவான்களை நாம் துன்பப்படுத்தி கொடுமை செய்திருக்கலாம். கர்த்தர் இவையெல்லாவற்றையும் பார்த்து, நம்மை உடனே தண்டித்துவிடாமல், நம்மீது நீடிய பொறுமையைக் காண்பிக்கிறார். தம்முடைய இரக்கத்தையும் கிருபையையும் காண்பிக்கிறார்.

கர்த்தர் பவுலிடத்தில் காண்பித்த நீடிய பொறுமையும், இரக்கமும், கர்த்தருடைய சமுகத்தில் அவரை விசுவாசித்து வருகிற எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. பவுல்மீது வந்திறங்கிய தேவகிருபை நம்மெல்லோருக்கும் திருஷ்டாந்தமாக நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் எவ்வளவு பெரிய பாவிகளாயிருந்தாலும், தேவனுடைய கிருபை நமக்கு மறுக்கப்படுவதில்லை. தேவகிருபை நமக்கு மறைக்கப்படுவதில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு இரக்கம் காண்பிப்பதில் ஐசுவரியமுள்ளவராயிருக்கிறார். நம்மை இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கரம் ஒருபோதும் குறுகிப்போவதில்லை.

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய பழைய பாவஜீவியத்தைப்பற்றிச் சொல்லிவிட்டு, தேவனுடைய மகிமையைப்பற்றிக் குறிப்பிடுகிறார். கர்த்தர் பவுல்மீது நீடியபொறுமையையும் இரக்கத்தையும் காண்பித்திருக்கிறார். தன்னுடைய எல்லா நிருபங்களிலும் பவுல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஸ்தோத்திரம்பண்ணுகிறார். அவருடைய கிருபையையும், இரக்கத்தையும் தாராளமாய்ச் சொல்லுகிறார். தேவனுக்கே கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருக்க வேண்டுமென்று பவுல் கர்த்தரை எப்போதும் துதிக்கிறார்.

நாமும் நம்முடைய ஜீவியத்தில் தேவகிருபையையும் இரக்கத்தையும் பெற்றிருக்கிறோம். அவருடைய கிருபையினால் நம்முடைய இருதயம் நிரம்பியிருக்கும்போது, அவரைத் துதிக்கிற துதியினாலும் நம்முடைய இருதயம் நிரம்பியிருக்கவேண்டும். தேவன் நமக்கு நல்லவராகயிருக்கும்போது, அவரை ஸ்தோத்திரம்பண்ணவும், அவரை மகிமைப்படுத்தவும் கவனமாயிருக்க வேண்டும். அவருக்கு கனமும் மகிமையும், துதியும் ஸ்தோத்திரமும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக என்று சொல்லி அவரைப் போற்றிப் புகழவேண்டும்.

நம்மீது கிருபையும் இரக்கமும் காண்பிக்கிற கர்த்தரை துதிப்பதற்கு நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. கர்த்தர் நம்மீது மனதுருக்கமாயிருக்கிறார். அவர் நம்முடைய நன்மைகளை விசாரிக்கிறவர். நம்மீது அன்புகூருகிற கர்த்தரைப்பற்றி நாம் எப்போதுமே உயர்வாகவும் மேன்மையாகவும் எண்ணவேண்டும். அவர்மீது நாம் வைத்திருக்கிற அன்பும் பக்தியும் அதிகரிக்கவேண்டும். அவரைத் துதிக்கிற துதியின் வார்த்தைகள் நம்முடைய ஜீவியத்தில் அதிகரிக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய கிருபையை நம்மீது வெளிப்படுத்தும்போது, அவருக்குப் பிரதிபலனாக, அவரைத் துதிப்பதைத் தவிர, வேறு ஒன்றையும் நம்மால் செய்யமுடியாது. துதிப்பது மாத்திரமே நம்மால் செய்ய முடிகிற காரியம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவர் செய்த நன்மைகளை நினைத்து அவரை சதாகாலங்களிலும் துதிக்கவேண்டும். பவுலைப்போலவே நாமும், "நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (1தீமோ 1:17) என்று சொல்லி அவரைத் துதிக்கவேண்டும்.

குமாரனாகிய தீமோத்தேயுவே 1தீமோ 1 : 18-20

1தீமோ 1:18. குமாரனாகிய தீமோத்தேயுவே, உன்னைக்குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம்பண்ணும்படி, இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக்கிறேன்; நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு.

1தீமோ 1:19. இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்.

1தீமோ 1:20. இமெனேயும் அலெக்சந்தரும், அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு அவர் செய்ய வேண்டிய ஊழியத்தைக் குறித்து கட்டளை கொடுக்கிறார். இதற்கு முன்பு தீமோத்தேயுவைக்குறித்து தீர்க்கதரிசன வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு புத்திசொல்லும்போது, அவருக்குச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லுகிறார். தீமோத்தேயுவுக்குச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள் பவுலை உற்சாகப்படுத்துகிறது. தீர்க்க தரிசனங்களின்படியே தீமோத்தேயு பயபக்தியோடு ஊழியம் செய்யவேண்டுமென்று அவருக்குக் கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தருடைய ஊழியம் பாவத்திற்கு விரோதமாகவும், சாத்தானுக்கு விரோதமாகவும் நடைபெறுகிற போராட்டம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இந்த நல்ல போராட்டத்தை விசுவாசத்தோடும், உற்சாகத்தோடும், தைரியத்தோடும் போராடவேண்டும். தீமோத்தேயு விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவராயிருக்கவேண்டும். நாம் சாத்தானுக்கு விரோதமாகப் போராடும்போது, அந்தப் போராட்டத்தில் ஜெயம்பெறுவோம் என்னும் நம்பிக்கை நமக்குள் உண்டாகவேண்டும் (1தீமோ 1:18).

கர்த்தருக்கு நாம் ஊழியம் செய்யும்போது நம்முடைய மனச்சாட்சி சுத்தமுள்ளதாயிருக்கவேண்டும். நாம் நல்மனச் சாட்சியுடையவர்களாய் காணப்படவேண்டும். நம்முடைய நல்மனச்சாட்சியை நாம் ஒருபோதும் தள்ளிவிடக்கூடாது. நல்மனச்சாட்சியைத் தள்ளிவிட்டால் அது விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் நம்மைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அதே வேளையில் பிறருக்கும் பிரச்சனை கொடுக்கக்கூடாது. கப்பல் சேதமாகும் போது, நமக்கும், கப்பலிலிருக்கிற மற்றவர்களுக்கும் சேதமுண்டாகும். நம்முடைய நல்மனச்சாட்சியை நாம் தள்ளிவிட்டால், நம்முடைய விசுவாசத்திற்கும் சேதமுண்டாகும். நாம் மற்றவர்களுடைய விசுவாசத்தையும் சேதப்படுத்திவிடுவோம்.

தங்களுடைய நல்மனச்சாட்சியைத் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்திய இரண்டுபேரை பவுல் இங்கு குறிப்பிட்டுச் சொல்லுகிறார். இமெனேயும் அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள். இவர்கள் இருவருமே கர்த்தருடைய ஊழியக்காரர்களாயிருந்தவர்கள். ஆனால் இவர்கள் தங்கள் நல்மனச்சாட்சியை தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்திவிட்டார்கள். பவுல் இவர்கள் இருவரையும் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். இவர்கள் இருவரும் தேவனுடைய ராஜ்யத்திற்கு உரியவர்களல்ல என்றும், இவர்கள் சாத்தானுடைய ராஜ்யத்திற்கு உரியவர்களென்றும் பவுல் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தினால் தீர்ப்பு செய்கிறார்.

இவர்கள் இருவரும் தூஷியாதபடி சிட்சிக்கப்படவேண்டும். தேவன், தமக்குச் சித்தமானால், ஒரு தீமையிலிருந்தும் நன்மையை உண்டுபண்ணக்கூடியவர். இமெனேயும் அலெக்சந்தரும் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறார்கள். சாத்தானிடத்திலிருக்கும், இவர்கள் இருவரும், சாத்தானுடைய குணாதிசயங்களை அதிகமாகக் கற்றுக் கொள்வார்களென்று நாம் பொதுவாக நினைப்போம். சாத்தான் தூஷிக்கிறவன். இவர்கள் இருவரும் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டபடியினால், இன்னும் அதிகமாய்த் தூஷிப்பார்கள் என்றும் நினைப்போம்.

ஆனால் பவுலோ இவர்கள் இருவரும் சாத்தானுடைய குணாதிசயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக, இவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுக்கவில்லை. அவர்கள் சிட்சிக்கப்படவேண்டும் என்பதற்காகவே பவுல் அவர்கள் இருவரையும் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. இவர்கள் இருவரும் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டாலும், தேவன் இவர்கள் இருவரையும் சாத்தானுடைய சமுகத்தில் சிட்சித்து, இவர்களைத் திருத்துவதற்கு வல்லவராயிருக்கிறார் (1தீமோ 1:20).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோருமே விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவர்களாயிருக்க வேண்டும். இவற்றை நாம் தள்ளிவிட்டால், அடுத்து எங்கே இருப்போமென்று நமக்கே தெரியாது. ஒருவேளை இமெனேயையும் அலெக்சந்தரையும்போல நாமும் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுக்கப் படுவதற்கு வாய்ப்புள்ளது. சாத்தானுடைய சமுகத்தில் நாம் சிட்சிக்கப்படுவதற்கு ஏதுவுண்டாகும். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவர்களாய் ஜீவிக்கவேண்டும். பாவத்திற்கு விரோதமாகவும், சாத்தானுக்கு விரோதமாகவும் நல்ல போராட்டம் பண்ணவேண்டும்.

2 அதிகாரம்

விசுவாசிகள் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும் (1தீமோ 2:1-8). ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளவேண்டும் (1தீமோ 2:9-15).

ஜெபம்பண்ணவேண்டும் 1தீமோ 2 : 1-8

1தீமோ 2:1. நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங் களையும் பண்ணவேண்டும்;

1தீமோ 2:2. நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காவும் அப்படியே செய்ய வேண்டும்.

1தீமோ 2:3. நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.

1தீமோ 2:4. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

1தீமோ 2:5. தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.

1தீமோ 2:6. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது.

1தீமோ 2:7. இதற்காகவே நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், புறஜாதிகளுக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப்பண்ணுகிற போதகனாகவும் நியமிக்கப் பட்டிருக்கிறேன்; நான் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்.

1தீமோ 2:8. அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ண வேண்டுமென்று விரும்புகிறேன்.

விசுவாசிகள் பொதுவாக எல்லா மனுஷருக்காகவும் ஜெபம்பண்ண வேண்டும். அதிலும் விசேஷமாக ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளவர்களுக்காகவும் ஜெபம் பண்ணவேண்டும். அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு ஜெபத்தைப்பற்றி பொதுவான ஆலோசனைகளைச் சொல்லுகிறார். தீமோத்தேயு எபேசு பட்டணத்திலுள்ள சபையார் மத்தியிலே ஊழியம் செய்கிறார். அவர்களுக்கு அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயு மூலமாய் ஆலோசனை சொல்லுகிறார்.

அவர்களுக்கு ஜெபம் பண்ணுவதைப்பற்றி ஏற்கெனவே உபதேசம் செய்யப்பட்டிருக்கிறது. ஜெபத்தைக் குறித்த வேதவசனங்கள் அவர்களுக்கு ஏற்கெனவே போதிக்கப்பட்டிருக்கிறது. எபேசு சபையார்மீது ஜெபத்தின் ஆவியானவர் ஊற்றப்பட்டிருக்கிறார். ஆகையினால் அவர்களுக்கு ஜெபத்தைக்குறித்து இன்னும் அதிகமாய் உபதேசம் பண்ணவேண்டியதில்லை. அவர்களுக்கு பொதுவான ஆலோசனைகளைச் சொன்னால் மாத்திரம் போதுமென்று பவுல் தீர்மானித்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் ஜெபிக்கிற ஜனங்களாகயிருக்கவேண்டும். விசுவாசிகளாகிய நாம் முதலாவதாக நமக்காக ஜெபிக்கவேண்டும். அதன்பின்பு எல்லா மனுஷருக்காகவும் ஜெபிக்கவேண்டும். நம்மிடத்தில் அன்புகூருவதுபோல நாம் பிறரிடத்திலும் அன்புகூர வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் உபதேசம். இந்த உபதேசத்தை நம்முடைய ஜெபத்திலும் பின்பற்றவேண்டும். நாம் நமக்காக ஜெபிப்பதுபோலவே, பிறருக்காகவும் ஜெபிக்கவேண்டும் (1தீமோ 2:1).

எபேசு சபையார் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டுமென்று அப்போஸ்தலர் பவுல் பிரதானமாய்ப் புத்திசொல்லுகிறார். இதைத் தொடர்ந்து அவர்கள் இராஜாக்களுக் காகவும் அதிகாரமுள்ளவர்களுக்காகவும் அப்படியே செய்யவேண்டுமென்று புத்தி சொல்லுகிறார் (1தீமோ 1:2). அக்காலத்தில் இராஜாக்களும் அதிகாரிகளும் புறஜாதியாராகயிருந்தார்கள். அவர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். புறஜாதியார் கர்த்தருடைய ஜனங்களை ஆளுகை செய்யும்போது, கர்த்தருடைய பிள்ளைகள் இராஜாக்களுக்காகவும், அதிகாரிகளுக்காகவும் ஜெபம்பண்ணுவது அவசியமாயிருக்கிறது.

நம்முடைய இராஜாக்களுக்காகவும், அதிகாரிகளுக்காகவும் கர்த்தரைத் துதிக்கவேண்டும். அவர்களுடைய நன்மைக்காக ஜெபிக்கவேண்டும். ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கவேண்டும். தேசத்தில் அமைதி உண்டாக வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும். தேசத்தில் அமைதி உண்டாகும்போதுதான், அந்தத் தேசத்தில் வாசம்பண்ணுகிற விசுவாசிகளுக்கும் அமைதி உண்டாகும்.

நாம் இராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளவர்களுக்காகவும் ஏன் ஜெபிக்கவேண்டுமென்று பவுல் விவரிக்கிறார். இராஜாக்களுடைய பார்வையில் நமக்கு சலுகை கிடைக்க வேண்டுமென்றோ அல்லது தேசத்தில் நாம் ஐசுவரியவான்களாக வேண்டுமென்றோ அல்லது இராஜாக்கள் நம்மைக் கனப்படுத்தவேண்டுமென்றோ அல்லது இராஜாக்களுடைய ஆட்சியில் நமக்கு அதிக அதிகாரம் கிடைக்கவேண்டுமென்றோ விசுவாசிகள் ஜெபிக்கவேண்டியதில்லை. இதற்காக ஜெபிக்கவேண்டுமென்று பவுலும் புத்திசொல்லவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லா பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும், கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணவேண்டும். இராஜாக்களும் அதிகாரிகளும் நம்மீது அன்போடும் கரிசனையோடும் இருக்கவேண்டும். நாம் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் இருந்தால்தான் நமக்கு அமைதியும் சமாதானமும் உண்டு. நாம் அமளிபண்ணினால் கலகம்தான் உண்டாகும்.

அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளுக்கு இரண்டு கடமைகளை இருப்பதாகச் சொல்லுகிறார். அவையாவன : 1. பக்தி 2. நல்லொழுக்கம். பக்தி என்பது தேவனை ஆராதிப்பது. தேவனிடத்தில் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங் களையும் பண்ணுவது. நல்லொழுக்கம் என்பது எல்லா மனுஷரோடும் நல்நடத்தையில் ஜீவனம்பண்ணுவது. இவ்விரண்டு சுபாவங்களும் நம்முடைய ஜீவியத்தில் இணைந்து செயல்பட வேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஜெபத்தில் அதிக நேரம் தரித்திருக்கவேண்டும். நாம் நமக்காகவும் ஜெபிக்கவேண்டும். பிறருக்காகவும் ஜெபிக்கவேண்டும். எல்லா மனுஷருக்காகவும் ஜெபிக்கவேண்டும். எல்லா மனுஷருக்காகவும் ஸ்தோத்திரம் பண்ணவேண்டும். சாதாரண மனுஷருக்காக மாத்திரமல்ல, இராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் ஜெபிக்கவேண்டும்.

அவர்களுக்கு நம்முடைய ஜெபங்கள் தேவைப்படுகிறது. இராஜாக்களும் அதிகாரிகளும் ஒவ்வொருநாளும் ஏராளமான பிரச்சனைகளைச் சந்தித்து வருகிறார்கள். அவர்கள் ராஜ்யத்தில் உயர்ந்த அந்தஸ்திலிருப்பதினால், தேசத்திற்கு விரோதமான எல்லா கண்ணிகளும் அவர்களை தாக்குவதற்கு அதிக வாய்ப்புள்ளது. இராஜாக்களும் அதிகாரிகளும் கண்ணிகளில் சிக்கிக்கொண்டால் அந்தச் தேசத்திற்கு அமைதியில்லை. தேசத்தின் ஜனங்கள் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ண முடியாது.

இவ்வாறு நாம் எல்லா மனுஷருக்காகவும், விசேஷமாக இராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும் வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங் களையும் பண்ணுவது, நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக நன்மையும் பிரியமுமாயிருக்கிறது (1தீமோ 2:3).

தேவன் மனுஷர்மீது வைத்துள்ள அன்பை அப்போஸ்தலர் பவுல் பொதுவாக விளக்குகிறார். தேவன் அன்புள்ளவர். அவர் எல்லா மனுஷர்மீதும் அன்புள்ள சித்தம் வைத்திருக்கிறார். தேவன் ஒருவரே (1தீமோ 2:5). எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1தீமோ 2:4). ஒவ்வொரு மனுஷனும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவேண்டும். இதுவே நாம் இரட்சிப்படைவதற்கு வழி.

தேவன் ஒருவரே. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே (1தீமோ 2:5). நம்முடைய மத்தியஸ்தர் எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மையே ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய கிருபையும் இரக்கமும் அவருடைய எல்லா கிரியைகளிலும் வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்தம் பண்ணுகிற ஊழியம் எல்லா மனுஷருக்கும் ஆசீர்வாதமாகயிருக்கிறது. இதனால் மனுஷர் இனிமேல் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டிய அவசியமில்லை. நியாயப்பிரமாணமானது கிரியையின் பிரமாணம். நாம் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் இரட்சிக்கப்படவில்லை.

இயேசுகிறிஸ்து, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராகயிருந்து, எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மையே ஒப்புக்கொடுத்திருக்கிறார். இந்தச் சத்தியத்தை விசுவாசிப்பதன் மூலமாய் நமக்கு இரட்சிப்பு உண்டாகிறது. நாம் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் இரட்சிக்கப்படாமல், இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம்.

இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராயிருப்பதினால், நாம் எல்லோரும் தேவகிருபையிலிருக்கிறோம். நம்முடைய பாவத்தினிமித்தமாய் நாம் எல்லோருமே மரித்துப்போகவேண்டியவர்கள். பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்யாத மனுஷன் ஒருவனுமில்லை. ஆனாலும் இயேசுகிறிஸ்து நமக்காக மரித்தார். தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக இயேசுகிறிஸ்து தம்மையே ஒப்புக்கொடுத்தார். எல்லா மனுஷரையும் மீட்கும் பொருளாக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். தம்முடைய சொந்த இரத்தத்தையே நம்மை மீட்கும் கிரயமாகச் செலுத்தினார்.

மத்தியஸ்தர் என்று சொல்லும்போது, அங்கு ஏதோ ஒரு பிரச்சனையும், குழப்பமும், கலகமும் இருக்கிறது என்பது தெளிவாகிறது. பிரச்சனை இருக்கிற இடத்தில்தான் மத்தியஸ்தர் தேவைப்படுவார். தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் பிரச்சனை உண்டாயிற்று. இந்தப் பிரச்சனை மனுஷருடைய பாவத்தினிமித்தமாய் உண்டாயிற்று. தேவன் பரிசுத்தர். ஆனால் மனுஷரோ பாவம் செய்து தேவனுக்கு விரோதமாக கலகம் செய்கிறார்கள். தேவனுக்கும் மனுஷருக்கும் இடையிலுள்ள ஐக்கியமும், சமாதானமும், மனுஷருடைய பாவத்தினால் முறிந்துபோயிற்று.

முறிந்துபோன ஐக்கியத்தையும் சமாதானத்தையும் மறுபடியும் உண்டுபண்ணுவதற்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே, தம்மை மத்தியஸ்தராக ஒப்புக்கொடுக்கிறார். இருவரையும் இணைக்கும் மத்தியஸ்த ஊழியத்தைச் செய்வதற்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை ஒப்புக் கொடுத்திருக்கிறார். மனுஷர் எல்லோரையும் மீட்கும்பொருளாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறார். இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது (1தீமோ 2:6).

இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்தை எல்லாருக்கும் பிரசங்கம்பண்ணும்படியாக, அப்போஸ்தலர் பவுல் அப்போஸ்தலனாக நியமிக்கப் பட்டிருக்கிறார். அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப்பண்ணுகிற போதகனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார் (1தீமோ 2:7). எல்லா மனுஷரும் இரட்சிப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். யூதமார்க்கத்தார் மாத்திரமல்ல, புறஜாதியாரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். எல்லா மனுஷரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவேண்டுமென்று நம்முடைய தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் அப்போஸ்தலர் பவுல் எல்லா மனுஷருக்கும் விசுவாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப்பண்ணுகிற அப்போஸ்தலராகவும், போதகராகவும் ஊழியம் செய்கிறார்.

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். இரட்சிக்கக்கூடாதபடிக்கு தேவனுடைய கரம் ஒருபோதும் குறுகிப்போகவில்லை. ஆனால் மனுஷருடைய இரட்சிப்பு தேவனுடைய வழியில்தான் நடைபெறும். எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென்று தேவன் சித்தமுள்ளவராயிருந்தாலும், தேவனுடைய வழியில் நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று நாமும் விரும்பவேண்டும். இரட்சிக்கப்படுகிறவர்கள் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவேண்டும். சத்தியத்தை அறிகிற அறிவு இல்லாமல் நம்முடைய இருதயம் சுத்தமாகாது. அது நன்மையான காரியங்களைச் சிந்திக்காது. சத்தியத்தை அறிகிற அறிவு நமக்கு இல்லையென்றால், சத்தியம் நம்மை ஆளுகை செய்யாது.

தேவன் ஒருவரே என்றும், தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே என்றும், எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மையே ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவே அவர் என்றும், அப்போஸ்தலர் பவுல் புறஜாதியாருக்கு பிரசங்கம்பண்ண வேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணவேண்டும். நாம் பிரசங்கம்பண்ணும்போது நமக்குள்ளும் விசுவாசமும் சத்தியமும் காணப்படவேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை உண்மையாய் நிறைவேற்றவேண்டும். அப்போஸ்தலர் பவுல் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களெல்லோருமே, பவுலைப் போல, பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மை மாத்திரம் சொல்லவேண்டும். ஊழியக்காரர்கள் ஜனங்கள் மத்தியிலே விசுவாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப்பண்ணுகிற போதகராக ஊழியம் செய்யவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிவிட்டு, நாம் அவரிடத்தில் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று புத்திசொல்லுகிறார். நாம் எல்லா இடங்களிலும் ஜெபிக்க வேண்டும். ஜெபத்திற்கு இடம் ஒரு தடையல்ல. எந்த இடத்தில் ஜெபம் பண்ணினாலும் தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறார். ஒரு சில இடங்களில் ஜெபம்பண்ணினால் கர்த்தர் நம்முடைய ஜெபத்தைக் கேட்கமாட்டாரென்று சொல்ல முடியாது. ஆகையினால் நாம் எல்லா இடங்களிலும் ஜெபம்பண்ணலாம் (1தீமோ 2:8).

நாம் ஜெபம்பண்ணும்போது நம்முடைய பரிசுத்தமான கைகளை உயர்த்தி ஜெபிக்கவேண்டும். நம்முடைய கரங்களில் பாவங்கள் இல்லையென்று தேவனுடைய சமுகத்தில் அறிக்கை செய்யவேண்டும். நம்மிடத்தில் பாவம் இருக்குமென்றால் பாவஅறிக்கை செய்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய ஜீவியம் பாவத்தினால் கறைபட்டிருக்கக்கூடாது. அது இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவி சுத்தம்பண்ணப்பட்டிருக்க வேண்டும்.

நாம் அன்போடு ஜெபிக்கவேண்டும். நம்மிடத்தில் கோபமும் தர்க்கமும் இருக்கக்கூடாது. யாரிடத்திலும் சண்டை போடக்கூடாது. "தர்க்கமில்லாமல் ஜெபம்பண்ணவேண்டும்" என்னும் வார்த்தைக்கு "சந்தேகப்படாமல் ஜெபம்பண்ணவேண்டும்" என்று ஒரு சிலர் பொருள் சொல்லுகிறார்கள். நாம் ஜெபிக்கும்போது, நம்முடைய இருதயத்தில் அன்பு நிரம்பியிருக்கவேண்டும். யார்மீதும் கோபம் இருக்கக்கூடாது. விசுவாசம் இருக்கவேண்டும். சந்தேகம் இருக்கக்கூடாது. கர்த்தர் நமக்கு எதை செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ, அதை நாம் மனுஷருக்குச் செய்ய பழகவேண்டும்.

ஸ்திரீயானவள்
1தீமோ 2 : 9-15

1தீமோ 2:9. ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப் பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல்,

1தீமோ 2:10. தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்.

1தீமோ 2:11. ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்.

1தீமோ 2:12. உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்கவேண்டும்.

1தீமோ 2:13. என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்.

1தீமோ 2:14. மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்.

1தீமோ 2:15. அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்.

அப்போஸ்தலர் பவுல் ஸ்திரீகளின் வஸ்திரங்களைக் குறித்தும், அலங்காரத்தைக் குறித்தும், புத்தி சொல்லுகிறார். ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடே கற்றுக் கொள்ளவேண்டும் (1தீமோ 2:11). தகுதியான வஸ்திரங்களை அணிந்து கொள்ள வேண்டும். விலையேறப்பெற்ற வஸ்திரத்தினால் ஸ்திரீகள் தங்களை அலங்கரிக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. விலையேறப் பெற்ற ஆடம்பரமான வஸ்திரங்களை விரும்புவது ஸ்திரீகளுக்குத் தகுதியாயிருக்காது.

தங்களை அலங்கரிப்பதற்கு விலையேறப்பெற்ற வஸ்திரங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, தெளிந்த புத்தியினாலும், நற்கிரியைகளினாலும் ஸ்திரீகள் தங்களை அலங்கரிக்க வேண்டும். தேவபக்தியுள்ளவர்கள் நற்கிரியைகளைச் செய்யவேண்டும். அவர்களுடைய வஸ்திரங்கள் மூலமாகவும் தேவபக்தி வெளிப்படவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் செய்வது எல்லாமே, தகுதியானதாக இருக்கவேண்டும். நம்முடைய விசுவாசத்திற்கேற்ற பிரகாரம் நம்முடைய ஜீவியம் அமைந்திருக்க வேண்டும்.

ஸ்திரீகளும் வேதவசனங்களைத் தியானம்பண்ணவேண்டும். அவர்களும் கிறிஸ்துவைப்பற்றிய அறிவில் வளர்ச்சி பெறவேண்டும். ஸ்திரீகள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ள வேண்டும். உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு அனுமதியில்லை.

முதலாவது ஆதாம் உருவாக்கப் பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப் பட்டாள் (1தீமோ 2:13). ஆதாமுக்குப் பின்பு ஏவாள் சிருஷ்டிக்கப்பட்டாலும், ஸ்திரீயானவளே ஆதாமுக்கு முன்பு வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள் (1தீமோ 2:14). ஸ்திரீயானவள் தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருக்க வேண்டும். அப்போது அவள் பிள்ளைபேற்றினாலே இரட்சிக்கப் படுவாள் (1தீமோ 2:15). ஸ்திரீயானவள் வஞ்சிக்கப் பட்டவளாகயிருந்தாலும், தேவனுக்கு விரோதமாக மீறுதலுக்குட்பட்டவளாக யிருந்தாலும், அவளும் இரட்சிக்கப் படுவதற்கு வாய்ப்புள்ளது. இயேசு கிறிஸ்து ஸ்திரீகளையும் இரட்சிக்கிறார்.

கிறிஸ்தவ உபதேசம் புருஷருக்கு மாத்திரமல்ல ஸ்திரீகளுக்கும் கொடுக்கப்படுகிறது. புருஷரைப்போலவே ஸ்திரீகளும் தெளிந்த புத்தியோடும், விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருக்க வேண்டும். அப்போஸ்தலருடைய காலத்தில் ஸ்திரீகளும் தேவபக்தியுள்ளவர்களாக இருந்தார்கள். அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் கர்த்தருக்கு ஊழியம் செய்த பயபக்தியுள்ள ஒரு சில ஸ்திரீகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

மயிரைப் பின்னுதல், பொன்னாபரணங்கள், முத்துக்கள், விலையேறப்பெற்ற வஸ்திரங்கள் ஆகியவை ஸ்திரீகளுக்கு மெய்யான அலங்காரமல்ல. நற்கிரியைகளே அவர்களுக்கு மெய்யான அலங்காரம். ஸ்திரீகள் கற்றுக்கொள்கிறவர்களாக இருக்கவேண்டும். ஸ்திரீகள் சபையில் உபதேசம்பண்ண, அப்போஸ்தலர் பவுல் அனுமதி கொடுக்கவில்லை (1தீமோ 2:12).

ஸ்திரீகள் தங்கள் புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் பவுல் அவர்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. ஸ்திரீயானவள் அமைதலாயிருக்க வேண்டும் என்று பவுல் புத்தி சொல்லுகிறார். ஸ்திரீகள் ஒன்றும் பேசாமல் அமைதியாயிருக்க முடியாது. கர்த்தருடைய ஊழியத்தில் பங்கு பெறுவதற்கு ஸ்திரீகளுக்கு அனுமதி உண்டு. அவர்கள் சபைகளில் உபதேசம் பண்ணாமல், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தாமல், தங்கள் வீட்டிலுள்ள சிறுபிள்ளைகளுக்கு கர்த்தருடைய வசனத்தை உபதேசம்பண்ணவேண்டும். கிறிஸ்துவின் உபதேசத்தை சிறு பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

BELLWETHER INTERNATIONAL

1 தீமோத்தேயு - விரிவுரை
I TIMOTHY - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

தீமோத்தேயு சிறுபிள்ளையாக இருந்தபோதே பரிசுத்த வேதவாக்கியங்களைக் கற்றுக்கொண்டார். தீமோத்தேயுவின் குடும்பத்தில் அவருடைய பாட்டியாகிய லோவிசாளுக்குள் கர்த்தரைப்பற்றும் விசுவாசம் நிலைத்திருந்தது. அதன்பின்பு அந்த விசுவாசம் தீமோத்தேயுவின் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அதன்பின்பு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம் தீமோத்தேயுவுக்குள்ளும் நிலைத்திருக்கிறது (2தீமோ 1:5). தீமோத்தேயுவின் பாட்டியும் தாயாரும் அவருக்கு கர்த்தருடைய வசனத்தை உபதேசம் செய்திருக்கிறார்கள்.

ஸ்திரீகள்மேல் புருஷருக்கு இருக்கிற அதிகாரத்தை பவுல் தெளிவுபடுத்துகிறார். ஸ்திரீயானவள் தன் புருஷனுக்கு ஏன் கீழ்ப்பட்டிருக்கவேண்டும் என்பதற்கான காரணத்தையும் சொல்லுகிறார். முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள் (1தீமோ 2:13,14). ஆகையினால் ஸ்திரீயானவளுக்கு புருஷன்மேல் அதிகாரம் செலுத்த உத்தரவு இல்லை. அவள் அமைதலாயிருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் ஸ்திரீகளுக்கு ஆறுதலான வார்த்தைகளையும் எழுதுகிறார். ஸ்திரீயானவள் வருத்தத்தோடே பிள்ளை பெற்றுக்கொள்கிறாள். பிள்ளைப் பேற்றினாலே அவள் இரட்சிக்கப்படுகிறாள். ஜீவனுள்ள பிள்ளைகளுக்கு ஜீவனுள்ள தாயாகயிருக்கிறாள் (1தீமோ 2:15).

3 அதிகாரம்

கண்காணியானவனின் தகுதிகள் (1தீமோ 3:1-7). உதவிக்காரரின் தகுதிகள் (1தீமோ 3:8-13). அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு நிருபம் எழுதுவதன் நோக்கம் (1தீமோ 3:14-16).

கண்காணி
1தீமோ 3 : 1-7

1தீமோ 3:1. கண்காணிப்பை விரும்புகிறவன் நல்லவேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை.

1தீமோ 3:2. ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்கவேண்டும்.

1தீமோ 3:3. அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து,

1தீமோ 3:4. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும்.

1தீமோ 3:5. ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?

1தீமோ 3:6. அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது.

1தீமோ 3:7. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் எபேசுவிலே ஊழியம் செய்து, அங்கு ஒரு சபையை ஸ்தாபிக்கிறார். அதன் பின்பு பவுல் அவர்களைவிட்டு மற்ற இடங்களில் சுவிசேஷ ஊழியம் செய்வதற்காகப் புறப்பட்டுப்போகிறார். பவுலும் விசுவாசிகளும் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணுகிறார்கள். பவுல் தங்களைவிட்டு பிரிந்து போவதற்காக மிகவும் அழுது அதிகமாய்த் துக்கப்படுகிறார்கள். பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்து, கப்பல் வரைக்கும் அவனுடனேகூடப் போகிறார்கள் (அப் 20:36-38).

எபேசியர் பவுல்மீது அதிக பிரியமாயிருக்கிறார்கள். பவுலும் அவர்கள்மீது அதிக பிரியத்தோடிருக்கிறார். பவுலுக்கு எபேசுவிலே தொடர்ந்து தங்கியிருந்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு வாய்ப்பில்லாமல் போயிற்று. அவர் பல இடங்களுக்கும் சென்று இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும். ஆனாலும் அவர் எபேசு சபையாரை மறந்துவிடவில்லை. அவர்கள் மத்தியிலே தங்கியிருந்து சுவிசேஷ ஊழியம் செய்வதற்காக, பவுல் தீமோத்தேயுவை அங்கே விட்டுச் செல்லுகிறார். தீமோத்தேயு எபேசுவிலே சுவிசேஷகராக ஊழியம் செய்கிறார்.

தீமோத்தேயுவின் சுவிசேஷ ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. சபை வளர்ச்சி பெறுகிறது. தீமோத்தேயுவுக்கு உதவிசெய்வதற்காக கண்காணிகளும், உதவிக்காரரும் நியமிக்கப்படுகிறார்கள். இந்த ஊழியங்கள் மனுஷருடைய சுயபுத்தியினாலோ, சுயதிட்டத்தினாலோ ஸ்தாபிக்கப்படவில்லை. தெய்வீக தீர்மானத்தின் பிரகாரமே கண்காணியானவனின் ஊழியம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

சபையில் கண்காணியின் ஊழியம் மிகவும் முக்கியமானது. அவர் தெளிந்த புத்தியுள்ளராகவும், ஞானமுள்ளவராகவும் இருக்கவேண்டும். சபையில் ஊழியம் செய்வதினால், கண்காணி தனக்குப் பெருமை உண்டாகவேண்டும் என்று நினைக்கக்கூடாது. சுயபெருமைக்காக ஊழியம் செய்வது கர்த்தருடைய ஊழியமல்ல. சபையில் தனக்குக் கொடுத்திருக்கிற ஊழியபொறுப்பை, கண்காணி தன்னுடைய சுயலாபத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது.

கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான் (1தீமோ 3:1). இவர் உலகப்பிரகாரமான காரியங்களுக்கு ஊழியம் செய்யாமல் ஆத்துமாக்களுக்கு ஊழியம் செய்கிறார். விசுவாசிகள் நித்திய ஜீவனையும் நித்திய சந்தோஷத்தையும் பெற்றுக் கொள்வதற்காக ஊழியம் செய்கிறார். ஆகையினால் ஒவ்வொரு விசுவாசியும் கண்காணிப்பை விரும்பவேண்டும். கண்காணியானவனின் ஊழியத்தை வாஞ்சையோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்போஸ்தலர் பவுல் இதைப்பற்றிச் சொல்லும்போது, “இது உண்மையான வார்த்தை” என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஊழியம் செய்வதற்கு தகுதியுள்ளவர்களாக யிருக்க வேண்டும். நாம் அழைக்கப்பட்ட ஊழிய அழைப்புக்கு பாத்திரவான்களாக ஊழியம் செய்யவேண்டும். ஊழியக் காரரிடத்தில் உண்மை இருக்கவேண்டும். பொய், பித்தலாட்டம், மோசடி ஆகிய எதுவும் கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் காணப்படக்கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரரை, யாரும் எந்த விஷயத்திலும் குற்றம் சாட்டக்கூடாது. கண்காணியானவன் குற்றம் சாட்டப்படாதவனாக இருக்கவேண்டும்.

ஒரே மனைவியையுடைய புருஷன் மாத்திரமே கண்காணியானவனின் ஊழியத்தைச் செய்யவேண்டும். கண்காணி பல மனைவிகளை விவாகம்பண்ணக் கூடாது. சாத்தானுக்கு விரோதமாக எச்சரிப்போடு ஜீவிக்கவேண்டும். தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாகயிருக்கவேண்டும்.

கண்காணியானவன் தன்னுடைய பேச்சிலும், செயலிலும் தெளிந்த புத்தியுள்ளவனாயிருக்க வேண்டும். நீதியாய்ப் பேசவேண்டும். நீதியாய்ச் செயல்படவேண்டும். தன்னுடைய ஒவ்வொரு செயலையும் கண்காணி மிகவும் கவனமாய்ச் செய்யவேண்டும். கண்காணியின் மூலமாய் சபையாருக்கு ஆறுதலும் பெருகவேண்டும். கண்காணி உபகாரம் பண்ணுகிறவனாயிருக்க வேண்டும். உபத்திரவம் பண்ணுகிறவனாயிருக்கக்கூடாது.

கண்காணியானவன் நல்ல நடத்தையுடையவனாயிருக்க வேண்டும். யோக்கியதையுள்ளவனாயிருக்க வேண்டும். வீண்பேச்சுக்களைப் பேசி பொழுதுபோக்கக்கூடாது. தேவையில்லாத காரியங்களில் கண்காணியானவன் தலையிடக்கூடாது. சாட்சியுள்ள ஜீவியம் ஜீவிக்கவேண்டும். கண்காணி அந்நியரை உபசரிக்கவேண்டும். போதக சமர்த்தனமாயிருக்க வேண்டும். தேவனைப்பற்றிய வெளிப்பாடுகளை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொடுக்க ஆர்வமுள்ளவனாயிருக்க வேண்டும். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் போதிக்கிற சாமர்த்தியமுள்ளவனாயிருக்கவேண்டும்.

கண்காணி மதுபானப் பிரியனாயிருக்கக் கூடாது. அடிக்கிறவனாயிருக்கக் கூடாது. மென்மையான மனதோடும், அன்போடும் கரிசனையோடும் பிறரிடம் பேசி பழகவேண்டும். கண்காணியினிடத்தில் முரட்டுக்குணம் காணப்படக்கூடாது. அவன் இழிவான ஆதாயத்தை இச்சிக்கக்கூடாது. உலகத்தின் ஐசுவரியங்கள்மீது கண்காணி தன் இருதயத்தைத் திருப்பக்கூடாது. உலக சிநேகம் கர்த்தருக்கு விரோதமான பகை. உலகப்பிரகாரமான காரியங்களை இச்சிக்காமல், கண்காணி ஆவிக்குரிய காரியங்கள்மீது விருப்பமுடையவனாயிருக்கவேண்டும்.

கண்காணி பொறுமையுள்ளவனாயிருக்கவேண்டும். சண்டை பண்ணுகிறவனாயிருக்கக் கூடாது. நாவினால் மற்றவர்களைத் தூஷிக்கக்கூடாது. தன்னுடைய கைகளினால் மற்றவர்களை அடித்துத் துன்புறுத்தக்கூடாது. கண்காணியானவன் பண ஆசையில்லாதவனாயிருக்கவேண்டும். பண ஆசை எல்லோருக்குமே தீமையானதுதான். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு பண ஆசை அதிகத் தீமையை உண்டுபண்ணும்.

கண்காணியானவன் தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்தவேண்டும். ஊழியக்காரருடைய குடும்பங்கள் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியான எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும். கண்காணி தன்னுடைய பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாக வளர்க்க வேண்டும். அவர்களை கீழ்ப்படியப்பண்ண வேண்டும். கண்காணியானவன் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி தன் பிள்ளைகளை கீழ்ப்படியபண்ண முடியாது. அவர்கள்மீது அன்பாகவும் கரிசனையாகவும் பழகவேண்டும். அன்பான வார்த்தைகளைப் பயன்படுத்தி, கண்காணியானவன் தன் பிள்ளைகளை, சகல நல்லொழுக்கமுள்ளவர்களாக கீழ்ப்படிய பண்ணவேண்டும். கண்காணியானவனுக்கு தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், அவனால் தேவனுடைய சபையை விசாரிக்க முடியாது.

கண்காணி இறுமாப்புள்ளவனாயிருக்கக் கூடாது. எல்லா சத்தியமும் தனக்குத் தெரியுமென்றும், தன்னால் மாத்திரமே சத்தியத்தை ஆழமாய் உபதேசிக்க முடியுமென்றும் இறுமாப்பு கொள்ளக்கூடாது. தங்களை உயர்த்துகிறவர்களும், தங்களுடைய இருதயங்களில் இறுமாப்புள்ளவர்களும் சத்தியத்தை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளாதவர்கள். இருதயத்தில் பெருமையுள்ளவன் சத்தியத்தை அறியாதவனாகவே இருக்கிறான்.

இறுமாப்பைக் குறித்து கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மிகுந்த எச்சரிப்போடிருக்க வேண்டும். தேவதூதர்கள் தங்கள் இறுமாப்பினால் பிசாசுகளானார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு வந்துவிடக்கூடாது. தேவதூதர்கள் இறுமாப்படைந்து, ஆக்கினையிலே விழுந்துபோனார்கள். கண்காணிகள் இறுமாப்படையக்கூடாது. நூதன சீஷனாயிருக்கக்கூடாது. கண்காணியானவன் புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயிருக்கவேண்டும். உற்றார் உறவினரிடத்திலும், சுற்றத்தாரிடத்திலும் கண்காணியானவன் நற்பெயர் எடுத்திருக்கவேண்டும்.

கண் காணியானவனுக்கு மாத்திரமல்ல, கர்த்தருடைய ஊழியக்காரர்களெல்லோருக்குமே இப்படிப்பட்ட நல்ல தகுதிகள் இருக்கவேண்டும். ஊழியக்காரருக்கு இப்படிப்பட்ட தகுதிகள் இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு, "இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்" *(2கொரி 2:16)* என்று பவுல் கேட்கிறார். அப்போஸ்தலர் பவுல் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறவர். ஆனாலும் ஊழியக்காரருக்குத் தேவையான இந்தத் தகுதிகள் தன்னிடத்திலும் பூரணமாயில்லையென்று தன்னையே தாழ்த்துகிறார். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக பவுல் தன்னை அப்பிரயோஜனமான ஊழியக்காரர் என்று அறிக்கை செய்கிறார்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர்கள் தங்களுடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். மிகவும் கவனமாய் ஜீவிக்கவேண்டும். நாம் எவ்வளவு பெரிய ஊழியக்காரர்களாகயிருந்தாலும், அப்போஸ்தலர் பவுல் இங்கு குறிப்பிட்டிருக்கிற தகுதிகளில் நாம் குறைவுள்ளவர்களாகவே இருக்கிறோம். கர்த்தருடைய ஊழியம் பரிசுத்தமானது. கர்த்தருடைய ஊழியத்தில் பங்குபெறுவது நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியம். கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாயும், உத்தமமாயும், மனப்பூர்வமாயும் நிறைவேற்றவேண்டும்.

கர்த்தரே நம்மை ஊழியத்திற்கு அழைத்திருக்கிறவர். நாம் அழைக்கப்பட்டிருக்கிற அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து, நம்மிடத்திலுள்ள குறைகளையெல்லாம் கர்த்தருடைய சமுகத்தில் அறிக்கை செய்து நம்மை தாழ்த்தவேண்டும். கர்த்தர் கொடுக்கிற கிருபைகளையும் தாலந்துகளையும் பயபக்தியோடு பெற்றுக் கொள்ளவேண்டும், ஊழியத்தை உண்மையாய்ச் செய்யவேண்டும். கர்த்தர் எதிர்பார்க்கிற தகுதிகள் நம்மிடத்தில் இல்லையே என்று நாம் சோர்ந்துபோய் விடக்கூடாது. நமக்குத் தேவையானவற்றை கர்த்தருடைய சமுகத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கர்த்தரே நம்மை ஊழியத்திற்கு அழைத்திருக்கிறவர். தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு அவரே நம்மை தகுதிப்படுத்துகிறவர். அவர் நம்மை உண்மையுள்ளவர்களென்று நம்பி, தம்முடைய ஊழியத்தை நம்மிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஊழியத்தைச் செய்வதற்குத் தேவையான தாலந்துகளையும் அவர் கொடுக்கிறார். நாம் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையோடும் பயபக்தியோடும் செய்யும்போது, கர்த்தர் நம்மை உயர்த்துவார். தம்முடைய மகிமையினால் நம்மை முடிசூட்டுவார். உண்மையுள்ள ஊழியக்காரர்களை கர்த்தர் கனப்படுத்துவார்.

உதவிக்காரர்
1தீமோ 3 : 8-13

1தீமோ 3:8. அந்தப்படியே, உதவிக்காரரும் இரு நாக்குள்ளவர்களாயும், மதுபானப் பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும்,

1தீமோ 3:9. விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச் சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும்.

1தீமோ 3:10. மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும்; குற்றஞ் சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம்.

1தீமோ 3:11. அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும்.

1தீமோ 3:12. மேலும், உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும்.

1தீமோ 3:13. இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்.

அப்போஸ்தலர் பவுல் உதவிக்காரருக்கு இருக்கவேண்டிய தகுதிகளை இங்கு சொல்லுகிறார். அவர்கள் நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும். உதவிக்காரர் மாத்திரமல்ல, எல்லா விசுவாசிகளுமே நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அதிலும் விசேஷமாக, சபையின் ஊழியங்களில் பங்குபெறுகிறவர்கள் எல்லா விஷயங்களிலும் நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

உதவிக்காரர் இருநாக்கு உள்ளவர்களாயிருக்கக் கூடாது. இருநாக்கு உள்ளவனுக்கு இரண்டுவிதமான இருதயங்கள் இருக்கும். இருநாக்குள்ளவர்கள் மற்றவர்களைப் புறங்கூறுவார்கள். கட்டுக்கதைகளைப் பேசுவார்கள். ஒரு நாவினால் பேசியதை மற்றொரு நாவினால் மறுத்துவிடுவார்கள். இவர்களுடைய வார்த்தையில் சுத்தம் இராது. சொன்னதை செய்யமாட்டார்கள். செய்வதை சொல்லவும் மாட்டார்கள்.

உதவிக்காரர் மதுபானப் பிரியராயிருக்கக் கூடாது. மதுபானப் பிரியனுக்கு ஏராளமான சோதனைகள் வரும். அவனுக்கு முன்பாக அநேக கண்ணிகள் வைக்கப்பட்டிருக்கும். மதுபானம் குடித்து வெறித்திருக்கிறவனுடைய நடை தள்ளாடும். எளிதில் கண்ணியில் விழுந்துவிடுவான். சோதனையின் அநேக கதவுகள் இவனுக்கு திறந்தே இருக்கும்.

உதவிக்காரர் இழிவான ஆதாயத்தை இச்சிக்கக்கூடாது. இவர்கள் சபையின் பொருளாதார காரியங்களை கவனிக்கிறவர்கள். சபையின் பொருளாதாரம் உதவிக்காரரின் கரங்களில் பொறுப்பாக ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது. தங்களுடைய பொறுப்புக்களை உதவிக்காரர் உத்திரவாதத்தோடு நிறைவேற்றவேண்டும். உதவிக்காரருக்கு சபையின் காரியங்கள்மீதே அக்கரையிருக்க வேண்டும். இவர்கள் இழிவான ஆதாயத்தை இச்சிக்கும்போது, இவர்களால் உண்மையுள்ள இருதயத்தோடு ஊழியம் செய்ய முடியாது.

உதவிக்காரர் விசுவாசத்தின் இரகசியத்தை சுத்தமனச்சாட்சியிலே காத்துக்கொள்ளவேண்டும். வழக்குகளில் நியாயந்தீர்ப்பு சொல்லும்போது இவர்கள் உண்மையுள்ளவர்களாய் நடந்துகொள்ளவேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். இவர்களுடைய பேச்சிலும் செயலிலும் குற்றம் இருக்கக்கூடாது. யாரும் இவர்கள்மீது குற்றம் சாட்டவும் கூடாது. இவர்களுக்கு உதவிக்காரரின் ஊழியத்தைக் கொடுப்பதற்கு முன்பாக, இவர்களை சோதித்தறியவேண்டும். இவர்களுடைய நற்குணங்களை சோதித்து உறுதிபண்ணவேண்டும்.

உதவிக்காரரின் மனைவிகளிடத்திலும் நல்லொழுக்கம் காணப்படவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர் உண்மையுள்ளவராகவும், நல்லொழுக்க முள்ளவராகவும் இருந்தால் மாத்திரம் போதாது. ஊழியக்காரரின் குடும்பத்தாரும் சாட்சியுள்ளவர்களாக இருக்கவேண்டும். அவர்களும் சுவிசேஷத்தின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்து பயபக்தியோடு ஜீவிக்கவேண்டும். ஊழியக்காரருடைய குடும்பத்தார் துன்மார்க்கமாய், ஜீவிக்கும்போது அது ஊழியக்காரரின் நற்சாட்சிக்கு களங்கத்தை உண்டுபண்ணும்.

கண்காணிக்கு சொல்லப்பட்டது போலவே, உதவிக்காரனும் ஒரே மனைவியையுடைய புருஷனாயிருக்க வேண்டும். கண்காணியைப்போலவே உதவிக்காரனும் தன்னுடைய பிள்ளைகளையும் சொந்த குடும்பத்தையும் நன்றாய் நடத்தவேண்டும். உதவிக்காரரின் குடும்பத்தார் சபையிலுள்ள மற்ற குடும்பத்தாருக்கு நல்ல முன்மாதிரியாக ஜீவிக்கவேண்டும்.

ஆதித்திருச்சபையில் இரண்டு விதமான ஊழியங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. ஒன்று கண்காணியின் ஊழியம். மற்றொன்று உதவிக்காரரின் ஊழியம். உதவிக்காரர் சபையின் பொருளாதார காரியங்களைப் பொறுப்பாகக் கவனித்து வந்தார்கள். ஊழியக்காரருக்கு சம்பளம் கொடுப்பது, தரித்திரரின் தேவைகளை சந்திப்பது, விதவைகளுக்கு உதவிபுரிவது ஆகிய ஊழியங்களையெல்லாம் உதவிக்காரர் நிறைவேற்றி வந்தார்கள்.

கொஞ்சத்தில் உண்மையுள்ளவனை கர்த்தர் அநேகத்தின்மேல் அதிகாரியாக்குவார். கர்த்தர் நமக்கு சிறிய ஊழியங்களைக் கொடுத்தாலும் அந்த ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்கும் போது, கர்த்தர் நம்முடைய ஊழியத்தின் எல்லையை விஸ்தாரமாக்குவார். ஊழியத்தில் நம்மை உயர்த்துவார். தன்னுடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்யும்போது, இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம் உதவிக்காரரின் இருதயத்தில் உறுதியான இடம்பெற்றிருக்கும். இவர்களுடைய விசுவாசம் வர்த்திக்கும். உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையை அடைவார்கள். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியமும் அடைவார்கள். நாம் செய்கிற ஊழியத்தில் கண்ணியம் குறைவாகயிருக்கும்போது நம்முடைய ஊழியம் ஆசீர்வாதமாயிராது.

தேவபக்திக்குரிய இரகசியம் 1தீமோ 3 : 14-16

1தீமோ 3:14. நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன்.

1தீமோ 3:15. தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

1தீமோ 3:16. அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவைப் பார்க்க எபேசு பட்டணத்திற்கு போகவேண்டுமென்று விரும்புகிறார். அந்த வாய்ப்பு தனக்கு சீக்கிரமாய்க் கிடைக்குமென்று நம்புகிறார். பவுல் தீமோத்தேயுவைப் பார்த்து அவருக்கு இன்னும் அநேக ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறார். தீமோத்தேயு செய்கிற ஊழியத்தில் பவுலும் அவரோடுகூட ஊழியத்தில் உதவிபுரியவேண்டுமென்று விரும்புகிறார். தீமோத்தேயுவினிடத்திற்கு தான் சீக்கிரமாய் வருவேனென்று பவுல் நம்புவதினால், தன்னுடைய பிரயாணத்தைப்பற்றியும், தான் அங்கு வந்து செய்யப்போகிற ஊழியங்களைக் குறித்தும், பவுல் விரிவாய்ச் சொல்லாமல் மிகவும் சுருக்கமாகச் சொல்லுகிறார்.

ஒருவேளை பவுல் எபேசு பட்டணத்திற்குப்போக தாமதம் ஏற்படலாம். அப்படி தாமதம் உண்டானால் தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை தீமோத்தேயு அறிந்திருக்கவேண்டும். அதற்காக பவுல் இங்கு ஒரு சில வார்த்தைகளை எழுதுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நல்லொழுக்கமுள்ளவர்களாக நடந்துகொள்ளவேண்டும். எல்லா விசுவாசிகளுமே நல்லொழுக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆனாலும் ஊழியக்காரர்கள் விசேஷமாக, தங்கள் நல்லொழுக்கத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் ஊழியர்கள் உலகப்பிரகாரமான வேலை செய்யவில்லை. அவர்கள் கர்த்தருடைய பரிசுத்தமான ஊழியத்தில் பங்கு பெற்றிருக்கிறார்கள். எபேசு சபையானது ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

சபையே சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. சபையில் கிறிஸ்துவின் உபதேசமும், வேதவசனமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சத்திய வசனமே சபைக்குத் தூணாகயிருக்கிறது. சபையின் மூலமாய் சத்திய வசனம் பிரசங்கம்பண்ணப்படும் போது, கிறிஸ்துவின் உபதேசமும், வேதவசனமும் சபைக்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் இந்த வசனத்தில் தீமோத்தேயுவுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனை சொல்லுவதாக வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். தீமோத்தேயு சுவிசேஷகராக எபேசுவிலே ஊழியம் செய்கிறார். தீமோத்தேயுவும், அவரோடுகூட கர்த்தருடைய ஊழியத்தை இணைந்து உண்மையாய் ஊழியம் செய்கிற அவருடைய உடன் ஊழியரும் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறார்கள் (1தீமோ 3:15). சபையிலே கிறிஸ்துவின் சத்தியத்தை மாசுபடாமல் காத்துக்கொள்வது இவர்களுடைய ஊழியம்.

நாம் சத்தியத்தை உண்மையாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும். சத்தியத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படியவேண்டும். நாம் சத்தியத்தை ஆராய்ச்சி பண்ணும்போது நம்மிடத்தில் பட்சபாதமுள்ள சிந்தனைகள் எதுவும் இருக்கக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்திற்குள் பேசவேண்டுமென்று விரும்பி, நம்முடைய இருதயத்தை கர்த்தருடைய வார்த்தைக்குத் திறந்து கொடுக்கவேண்டும். சத்தியத்தை வாங்கவேண்டும், விற்கக்கூடாது. என்ன கிரயம் செலுத்தவேண்டியதாயிருந்தாலும், அதை மனப்பூர்வமாய்ச் செலுத்தி சத்தியத்தை வாங்கவேண்டும்.

நாம் பெற்றுக்கொண்ட சத்தியத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். சத்தியத்தை தியானிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் நமக்கு பல வெளிப்பாடுகளைக் கொடுப்பார். ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்துகிற வேதத்தின் இரகசியங்களெல்லாம் நம்முடைய இருதயத்தில் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். சத்தியம் நம்முடைய இருதயத்திலிருக்கும்போது, நம்முடைய நாவு சத்தியத்தை அறிக்கை செய்யும். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நாம் ஜெபத்தோடு பெற்றுக்கொண்ட சத்தியத்தை, பயபக்தியோடு மற்றவர்களுக்கும் அறிவிக்கவேண்டும். நாம் சத்தியத்தைப் பெற்றுக்கொள்வதிலும் கவனம் செலுத்தவேண்டும். சத்தியத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பதிலும் கவனம் செலுத்தவேண்டும்.

சத்தியத்திற்கு சபையும், கர்த்தருடைய ஊழியக்காரரும் தூணும் ஆதாரமுமாயிருக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் சத்தியத்தை தேவபக்திக்குரிய இரகசியம் என்று சொல்லுகிறார். சத்தியத்தின் மேன்மையான இரகசியங்களை இங்கு எழுதுகிறார்.

கிறிஸ்தவ மார்க்கம் ஒரு இரகசியம். இது மனுஷருடைய புத்தியினாலோ அல்லது இயற்கையில் நடைபெறுகிற ஏதாவது ஒரு சம்பவத்தினாலோ ஸ்தாபிக்கப்படவில்லை. கிறிஸ்தவ உபதேசம் மனுஷருடைய புத்திக்கும், சக்திக்கும் மேலானது. ஆனாலும் கிறிஸ்துவின் உபதேசமானது மனுஷர் புரிந்துகொள்ள முடியாத புதிரான இரகசியமுமல்ல. இது தேவபக்திக்குரிய இரகசியம். புறஜாதியாரின் மார்க்கங்களோ மனுஷரின் தர்க்க ரீதியான காரியங்களையும், உலகப் பிரகாரமான காரியங்களையும் ஆதாரமாக வைத்து ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவின் சத்தியமோ தேவபக்திக்குரிய இரகசியமாயிருக்கிறது.

தேவபக்திக்குரிய இரகசியம் கிறிஸ்துவைப்பற்றியது. இயேசுகிறிஸ்து மாம்சத்திலே வெளிப்பட்டார். ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார். அவரிடத்தில் ஒரு பாவமும் காணப்படவில்லை. ஆனாலும் பாவிகளில் ஒருவரைப்போல கிறிஸ்து இயேசுவானவர் தண்டிக்கப்பட்டார். அவமானப் படுத்தப்பட்டார். துன்மார்க்கருக்கு மரணதண்டனை கொடுப்பதுபோல, இயேசுகிறிஸ்துவுக்கு மரணதண்டனை கொடுத்து, அவரை சிலுவையிலே அறைந்தார்கள். கல்வாரி சிலுவையில் மனுஷருடைய பாவங்களைப் போக்குவதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். மரித்துப்போன இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை கல்லறையிலே அடக்கம் பண்ணினார்கள். ஆனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார். அதனால் ஆவியிலே இயேசுகிறிஸ்து நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்.

BELLWETHER INTERNATIONAL

1 தீமோத்தேயு - விரிவுரை
I TIMOTHY - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

இயேசுகிறிஸ்து தேவதூதர்களால் காணப்பட்டார். தேவதூதர்கள் அவருக்கு ஊழியம் செய்தார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவதூதர்களுக்கும் ஆண்டவராயிருக்கிறார். அவர் சேனைகளின் கர்த்தர். அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவைப் புறஜாதியார்களிடத்தில் பிரசங்கித்தார்கள். இயேசுகிறிஸ்துவே தேவ பக்திக்குரிய இரகசியமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவை புறஜாதியாரிடத்தில் பிரசங்கிக்கும்போது, அவரை புறஜாதியாருக்கு இரட்சகராகவும், மீட்பராகவும் பிரசங்கித்தார்கள்.

இயேசுகிறிஸ்து உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார். இந்த உலகம் துன்மார்க்கத்தில் நிறைந்திருக்கிறது. அப்படிப்பட்ட உலகத்திலுள்ள ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று நம்புகிறார்கள். எருசலேமிலே இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்தவர்களே, அவரை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார். இயேசுகிறிஸ்து மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து அதன்பின்பு நாற்பது நாட்களாக இந்தப் பூமியிலே தம்முடைய உயிர்த்தெழுந்த சரீரத்தில் வாசம்பண்ணினார். அதன்பின்பு அவர் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இப்போது இயேசுகிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு பரலோகமே நித்திய வாசஸ்தலம். மாம்சத்திலே வெளிப்பட்ட இயேசுகிறிஸ்து மெய்யாகவே தேவனாகயிருக்கிறார். இதுவே தேவபக்திக்குரிய இரகசியம்.

தேவபக்தியானது அதன் எல்லா அம்சங்களிலும் இரகசியமாகவே இருக்கிறது. இதுவே பிரதான இரகசியம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவபக்தியை ஏதோ ஒரு விநோதமான புதிர் என்று சந்தேகப்படாமல், அதை பயபக்தியோடு நம்முடைய ஜீவியத்தில் அங்கீகரிக்கவேண்டும். இரகசியத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்குப் பதிலாக, அந்த இரகசியத்திற்கு நாம் உரியவர்களாகவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு சத்தியமே தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

4 அதிகாரம்

பிற்காலங்களிலே ஒரு சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் (1தீமோ 4:1-3). விசுவாசிகளின் விடுதலையைக் குறித்து பவுல் விவரிக்கிறார் (1தீமோ 4:4,5). தீமோத்தேயுவுக்கு ஆலோசனை சொல்லுகிறார் (1தீமோ 4:6-16).

விசுவாசத்தை விட்டு விலகிப் போனார்கள் 1தீமோ 4 : 1-5

1தீமோ 4:1. ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்.

1தீமோ 4:2. விவாகம் பண்ணாதிருக்கவும்.

1தீமோ 4:3. விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும்ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும்வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள்.

1தீமோ 4:4. தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல.

1தீமோ 4:5. அது தேவ வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்.

பிற்காலங்களில் ஒருசிலர் விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்களென்று அப்போஸ்தலர் பவுல் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார். இந்தத் தீர்க்கதரிசனத்தை ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறார். அந்திக்கிறிஸ்துவின் வருகையைப்பற்றியும் பரிசுத்த ஆவியானவர் முன்னறிவித்திருக்கிறார். சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். எல்லோரும் விசுவாசத்தை விட்டுவிலகிப்போவதில்லை. ஒரு சிலர் மாத்திரமே விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். எல்லா காலத்திலும், எல்லா சூழ்நிலையிலும் கர்த்தருக்கு ஒரு கூட்டம் ஜனம் மீதமாயிருப்பார்கள்.

விசுவாசத்தை விட்டு விலகிப் போகிறவர்கள் சத்தியத்திற்குச் செவிகொடுக்காமல் பிசாசின் உபதேசங்களுக்குச் செவிகொடுப்பார்கள். வஞ்சிக்கிற ஆவிகளுக்கு செவி கொடுப்பார்கள். மனச்சாட்சியிலே சூடுண்ட பொய்யர்கள் இவர்களை மாயம்பண்ணுவார்கள். இவர்களுடைய மனச்சாட்சியில் சூடுபோடப்பட்டிருக்கிறது. இவர்களிடத்தில் உண்மையில்லை. ஆவிக்குரிய சத்தியமில்லை. நேர்மையோ, கண்ணியமோ இல்லை. இவர்களுடைய மனச்சாட்சி மழுங்கிப்போயிற்று.

இந்தப் பொய்யர்கள் விவாகம் பண்ணாதிருக்கவேண்டுமென்று போதிக்கிறார்கள். விவாகத்தைத் தடைபண்ணுகிறார்கள். தேவன் படைத்த போஜன பதார்த்தங்களைப் புசிக்காமல் அவற்றை விலக்கவேண்டுமென்று கட்டளை கொடுக்கிறார்கள். சில குறிப்பிட்ட காலங்களில் மாத்திரம் மார்க்க சிந்தையோடு, பயபக்தியாய் ஜீவித்தால் போதுமானது என்று துர்உபதேசம் சொல்லுகிறார்கள்.

பிற்காலங்களிலே ஒரு சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவது நமக்கு ஆச்சரியமாயிருக்கக்கூடாது. ஆவியானவர் இந்தச் சத்தியத்தை நமக்கு வெளிப்படையாகச் சொல்லுகிறார். புறஜாதியாரின் மார்க்க உபதேசங்கள் வெளிப்படையாக இருக்காது. அவர்கள் எப்போதுமே ஒளிவு மறைவோடு பேசுவார்கள். எதையும் வெளிப்படையாகப் பேசமாட்டார்கள். புறஜாதியார் மார்க்க காரியங்களைச் சந்தேகத்தோடு, நிச்சய மில்லாமல் அறிவிப்பார்கள். மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யர்கள் மாய்மாலம் பண்ணினாலும், எல்லா விசுவாசிகளும் விசுவாசத்தை விட்டு விலகிப்போவதில்லை. ஒரு சிலர் மாத்திரமே விலகிப்போவார்கள்.

ஒருவர் விசுவாசத்தை விட்டு விலகிப்போகவேண்டுமென்றால், முதலாவதாக அவருடைய இருதயம் கடினப்படவேண்டும். அவருடைய மனச்சாட்சியிலே சூடுபோடப்பட்டிருக்கவேண்டும். அப்போதுதான் அவர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார். இவர் தனியாய்ப் போகாமல், தன்னோடு பலவீனமான விசுவாசிகளை கூடச்சேர்த்துக்கொண்டு போவார்.

கர்த்தர் நமக்கு சில சுயாதீன விடுதலைகளைக் கொடுத்திருக்கிறார். அடிமைத்தனத்தின் கட்டுக்களிலிருந்து கர்த்தர் நம்மை விடுவித்திருக்கிறார். தேவன் படைத்த போஜனங்களில் சில சுத்தமானவையென்றும், மற்றவை அசுத்தமானவையென்றும் நியாயப் பிரமாணத்தின்படி வேறுபிரிக்கப் பட்டிருக்கிறது. இந்த வித்தியாசத்தை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே அதம்பண்ணிப் போட்டார். இப்போது தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. ஸ்தோத்திரத்தோடே எல்லா போஜனங்களையும் ஏற்றுக்கொள்ளலாம். போஜனங்களை ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல (1தீமோ 4:4).

தேவன் நம்மீது கிருபையாகவும் கரிசனையாகவும் இருக்கிறார். நாம் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் அநேக போஜனபதார்த்தங்களைப் படைத்திருக்கிறார். இவை தேவனுடைய கிருபையினால் நமக்குக் கிடைத்திருக்கிற ஈவு. தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை நாம் விலக்க வேண்டியதில்லை. ஆனால் கள்ளப்பாதகர்களோ இந்தப் போஜன பதார்த்தங்களை நாம் விலக்க வேண்டுமென்று நமக்குக் கட்டளையிடு கிறார்கள். இவர்கள் பொய்யர்கள். சத்தியத்தைப் புரட்டுகிறவர்கள்.

தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. நல்லதை நாம் அசுத்தமானது என்று சொல்லக்கூடாது. தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை நாம் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்க வேண்டும். இது தேவனுடைய நீதி. ஆனால் பொய்யர்களோ போஜன பதார்த்தங்களை, சுத்தமானது என்றும் அசுத்தமானது என்றும் வித்தியாசம்பண்ணுகிறார்கள். இது தேவனுடைய உபதேசமல்ல. இது பொய்யர்களின் உபதேசம். தேவன் படைத்தது எல்லாவற்றையும் நாம் ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளலாம். ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப் படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல (1தீமோ 4:4).

தேவன் படைத்த போஜன பதார்த்தங்கள் தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும். எல்லா போஜனபதார்த்தங்களும் நமக்கு பரிசுத்தமாக்கப்பட்டு கொடுக்கப் பட்டிருக்கிறது. தேவவசனமே போஜனங்களைப் பரிசுத்தப்படுத்துகிறது. நாம் போஜனம்பண்ணுவதற்கு முன்பாக நமக்கு போஜனம்கொடுத்த கர்த்தரைத் துதிக்கவேண்டும். ஸ்தோத்திரம் பண்ணவேண்டும். நாம் ஸ்தோத்திரத் தோடே போஜனங்களைப் புசிக்கும்போது, அது தள்ளப்படவேண்டிய போஜனமல்ல. தேவன் நமக்காகவே படைத்த போஜனம்.

தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. தேவனுடைய சர்வசிருஷ்டியும் நல்லதாகவே இருக்கிறது. தம்முடைய சிருஷ்டிகள் அனைத்தையும் தேவன் நமக்கு போஜனபதார்த்தங்களாகக் கொடுத்திருக்கிறார். இது கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்போது அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள நாம் மறுக்கக்கூடாது. ஒரு போஜனம் பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்றால், அதை வேதவசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தப்படுத்தலாம். நாம் புசிக்கிற ஒவ்வொரு போஜன பதார்த்தத்தையும் ஸ்தோத்திரம்பண்ணி ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரன்
1தீமோ 4 : 6-10

1தீமோ 4:6. இவைகளை நீ சகோதரருக்குப் போதித்துவந்தால், விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும் நீ அநுசரித்த நற்போதகத்திலும் தேறினவனாகி, இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய்.

1தீமோ 4:7. சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவபக்திக்கேதுவாக முயற்சிபண்ணு.

1தீமோ 4:8. சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது.

1தீமோ 4:9. இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கிரிப்புக்கும் பாத்திரமுமாயிருக்கிறது.

1தீமோ 4:10. இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம், நிந்தையும் அடைகிறோம்; ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

தங்கள் மூலமாய் சுவிசேஷத்தைக் கேட்கிறவர்கள் அதை மறந்துவிடாமல், அவர்களுடைய இருதயத்தில் பதியவைத்திருக்கவேண்டுமென்று அப்போஸ்தலர்கள் விரும்புகிறார்கள். மறப்பது மனுஷருடைய இயல்பான சுபாவம். நாம் சத்தியத்தைக் கற்றுக்கொள்வதிலும், அதை நினைவில் வைத்துக்கொள்வதிலும் வேகம் காண்பிப்பதில்லை. தேவனுடைய காரியங்களில் நாம் மெதுவாகவே தேர்ச்சியடைகிறோம். நம்முடைய புத்தி மந்தமாயிருக்கிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசத்திலும் அறிவிலும் தேறினவர்களாக இருக்க வேண்டும்.

நாம் சத்தியத்தை மற்றவர்களுக்கு உபதேசம்பண்ணும்போது, நமக்கு நாமே உபதேசத்துக்கொள்கிறோம். சத்தியத்தை மறவாமல் நினைவில் வைத்திருப்பதற்கு சிறந்த வழிகளில் ஒன்று, சத்தியத்தை மற்றவருக்குப் போதிப்பதுதான். தீமோத்தேயு சத்தியத்தை சகோதரருக்குப் போதிக்கவேண்டுமென்றும், அவர் அனுசரிக்கிற நற்போதகத்தில் தேறினவராயிருக்கவேண்டுமென்றும் பவுல் புத்திசொல்லுகிறார் (1தீமோ 4:6).

தீமோத்தேயுவும், எபேசுவிலே ஊழியம் செய்கிற மற்ற ஊழியக்காரரெல்லோரும் தேவபக்தியிலே விருத்தியடையவேண்டும் என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். அவர்கள் தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணவேண்டும். இவ்வாறு முயற்சி பண்ணுகிறவர்கள் தேவபக்தியில் தேறினவர்களாகயிருப்பார்கள். நாம் எப்போதாது ஒரு முறை முயற்சி பண்ணினால் போதுமானதல்ல. நாம் எப்போதுமே தேவபக்திக்கேதுவாக தொடர்ந்து முயற்சிபண்ணிக் கொண்டிருக்கவேண்டும்.

நம்முடைய பாவங்களை மரிப்பதற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்முடைய சரீரத்தை மரிப்பதற்காக ஒப்புக் கொடுத்தாலும், நம்முடைய பாவங்களை மரிப்பதற்கு ஒப்புக்கொடுக்க வில்லையென்றால் நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு நாம் விலகியிருக்கவேண்டும். தேவபக்தி யினால் நமக்கு அநேக அனுகூலங்கள் உண்டு. தேவபக்தியுள்ள ஜனங்களுக்காக கர்த்தர் இம்மையிலே அநேக ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணி யிருக்கிறார். தேவபக்தியுள்ளவர்களுக்கு, வரப்போகிற ஜீவியத்திற்கும் ஏராளமான ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணியிருக்கிறார்.

தேவபக்தியுள்ளவர்கள் இம்மையிலே ஒரு சில ஆசீர்வாதங்களை மாத்திரம் பெற்றிருக்கலாம். உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களில் தேவபக்தியுள்ளவர்கள் ஒருவேளை குறைவுள்ளவர் களாகயிருக்கலாம். ஆனாலும் வரப்போகிற ஜீவியத்தில், கர்த்தர் தேவபக்தியுள்ள வர்களுக்கு ஏராளமான ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணியிருக்கிறார். நம்முடைய நித்திய ஜீவன் ஆசீர்வாதமுள்ளதாகவும், மகிமையுள்ளதாகவும் இருக்கும். நாம் சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகியிருந்தால் மாத்திரம் போதாது. தேவபக்திக் கேதுவாகவும் நாம் தொடர்ச்சியாய் முயற்சிபண்ணிக்கொண்டிருக்கவேண்டும்.

சரீர முயற்சி அற்பபிரயோஜன முள்ளது. நம்முடைய முயற்சியினால் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணும்போது, நமக்கு இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் ஆசீர்வாதமுண்டாகும். தேவபக்தியானது எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது (1தீமோ 4:8).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணுகிறோம். இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம். நிந்தையுமடைகிறோம். நமக்கு நிந்தை உண்டானாலும், தேவபக்தியே எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளது. ஆகையினால், இந்தப் பிரயாசத்தில் நாம் அடைகிற நிந்தையை ஒரு பொருட்டாக எண்ணாமல், தேவபக்திக்கேதுவாக தொடர்ந்து முயற்சிபண்ணிக் கொண்டிருக்கவேண்டும். இந்த வார்த்தை உண்மையும், எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமாயிருக்கிறது என்று பவுல் எழுதுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தி னிமித்தம் நாம் எடுக்கிற பிரயாசங்களும், நாம் எடுக்கிற முயற்சிகளும் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் நாம் அடைகிற நிந்தைகளுக்கு ஏற்ற பலனைப் பெற்றுக்கொள்வோம். இயேசு கிறிஸ்துவுக்காக நாம் ஒரு சில காரியங்களை இழந்துபோகலாம். ஆனாலும் இயேசுகிறிஸ்துவினால் ஒருவருக்கும் இழப்பு உண்டாவதில்லை.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற வரையிலும் நமக்கு பிரயாசமும் நிந்தையும் உண்டு. நாம் இப்பிரபஞ்சத்தில் சாதாரண மனுஷர்களாயிருப்பதைவிட, தேவபக்தி யுள்ளவர்களாக இருப்பதினிமித்தமாய் நமக்கு அதிக பிரயாசமும் அதிக நிந்தையும் உண்டு. கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு இப்பிரபஞ்சத்தில் உபத்திரவங்கள் உண்டு. கர்த்தருடைய ஊழியத்தினிமித்தம் பிரயாசப்படுகிற வர்களும், நிந்தையடைகிறவர்களும் ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கவேண்டும். நம்முடைய இரட்சராகிய இயேசுகிறிஸ்து ஜீவனுள்ளவர். அவர் எல்லா மனுஷருக்கும் இரட்சராகயிருக்கிறார். நாம் தேவன்மீது நம்பிக்கை வைத்திருப்பதினால் நம்முடைய நம்பிக்கை ஒருபோதும் வீணாய்ப்போகாது.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து எல்லா மனுஷருக்கும் இரட்சகராகயிருக்கிறார். அவரைத் தேடுகிறவர்களுக்கும், அவருக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கும் அவர் அநேக ஆசீர்வாதங்களைக் கொடுப்பார். இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிற எல்லா மனுஷரையும் இரட்சிப்பதற்கு ஜீவனுள்ள தேவனானவர் போதுமான வராகயிருக்கிறார். அதுபோலவே அவர் நிமித்தமாய் பிரயாசப்படுகிறவர்களையும், நிந்தையடைகிறவர்களையும் ஆசீர்வதிப் பதற்கும் அவர் போதுமானவராக யிருக்கிறார்.

இப்பிரபஞ்சத்தில் விசுவாசிகளுடைய ஜீவியம் பிரயாசப்படுகிற ஜீவியம். இது நிந்தையடைகிற ஜீவியம். அப்போஸ்தலர் பவுல் இதைப்பற்றி எழுதும்போது, இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியத்தினி மித்தமாய் நாம் பிரயாசப்படுகிறோம் என்றும், நிந்தையுமடைகிறோம் என்றும் எழுதுகிறார். நாம் இப்பிரபஞ்சத்தில் இயேசுகிறிஸ்துவுக்காக பிரயாசப்படும் போது, நாம் நிந்தையடைவோம் என்று எதிர்பார்க்கவேண்டும். நாம் விசுவாசத்தினால் கிரியை நடப்பிக்கிறோம். அன்பினால் ஊழியம் செய்கிறோம். நம்முடைய பிரயாசத்திலும், நிந்தையிலும், நம்முடைய இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம் (1தீமோ 4:10).

தீமோத்தேயுவுக்கு புத்திமதி 1தீமோ 4 : 11-16

1தீமோ 4:11. இவைகளை நீ கட்டளையிட்டுப் போதித்துக்கொண்டிரு.

1தீமோ 4:12. உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும் கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.

1தீமோ 4:13. நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு.

1தீமோ 4:14. மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே.

1தீமோ 4:15. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு.

1தீமோ 4:16. உன்னைக் குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு கட்டளையிட்டு போதிக்கிறார். பவுல் மூலமாய் தான் பெற்றுக்கொண்ட உபதேசத்தை, தீமோத்தேயுவும் எபேசு சபையிலுள்ள வர்களுக்கு கட்டளையிட்டு போதித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று புத்திசொல்லுகிறார் (1தீமோ 4:11).

தீமோத்தேயு இப்போது இளவயதினராயிருக்கிறார். அவருடைய இளமையைக் குறித்து ஒருவனும் அவரை அசட்டைபண்ணாதபடிக்கு தீமோத்தேயு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். தீமோத் தேயுவும் இளவயதினாரா யிருந்தாலும், மற்றவர்கள் தன்னை மதிக்கும் பிரகாரமாக நடந்துகொள்ளவேண்டும். ஞானத்தோடு புத்திசொல்லவேண்டும். வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் தீமோத்தேயு மற்ற விசுவாசிகளுக்கு நல்ல முன்மாதிரி யாயிருக்க வேண்டும்.

இளவயதுள்ளவர்கள் இளவயதின் மாயையில் சிக்கிக்கொள்ளக்கூடாது. தங்களுடைய வாலிபவயதில் இப்பிரபஞ்சத்தின் ஆசைகளுக்கு தங்களை அடிமைப்படுத்திவிடக்கூடாது. இளவயதுள்ளவர்கள் மிகுந்த எச்சரிப்போடும், பயபக்தியோடும் ஜீவித்தால் அவர்களுடைய இளமையைக் குறித்து ஒருவரும் அசட்டைபண்ணமாட்டார்கள். இளவயதுள்ளவர்கள் நற்குணத்தோடும், பயபக்தியோடும் ஜீவிப்பதைப் பார்க்கும் போது, வயதில் முதிர்ந்தவர்கள்கூட, அவர்களை அசட்டைபண்ணவேமாட்டார்கள்.

தீமோத்தேயு கர்த்தருடைய வார்த்தையை போதித்தால் மாத்திரம் போதாது. அதற்கேற்ற பிரகாரமாக ஜீவிக்கவும்வேண்டும். சாட்சியுள்ளவராக, தான் உபதேசிக்கிற சத்தியத்திற்கேற்ற பிரகாரமாக ஜீவிக்கவேண்டும். தீமோத்தேயு மாத்திரமல்ல, கர்த்தருடைய ஊழியக்காரர்களெல்லோருமே, தாங்கள் உபதேசிக்கிற உபதேசத்திற்கேற்ற பிரகாரமாய் ஜீவிக்கவேண்டும். நம்முடைய பிரசங்கமும் நடத்தையும் இசைந்திராமல் முரண்பட்டிருக்குமென்றால், அதனால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. நாம் ஒரு கையினால் கட்டுவோம். நாம் கட்டியதையே மறுகையினால் இடித்துப் போடுவோம். நம்முடைய பிரசங்கமும் ஜீவியமும் ஒத்துப்போகவில்லையென்றால், நம்முடைய ஊழியம் ஒருபோதும் ஆசீர்வாதமாகயிராது. ஒரு காலத்திலும் நம்முடைய ஊழியம் கட்டியெழுப்படமாட்டாது (1தீமோ 4:12).

தீமோத்தேயு வாசிக்கிறதில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று பவுல் அவருக்குப் புத்திசொல்லுகிறார். தீமோத்தேயு அநேக விசேஷித்த வரங்களைப் பெற்றிருக்கிறார். ஆனாலும் மிகவும் சாதாரண வரங்களையும் அவர் பயன்படுத்தவேண்டும். "வாசிக்கிறது" என்பது எல்லா ஜனங்களுக்கும் முன்பாக வேதவசனங்களை வாசிப்பதைக் குறிக்கிற வார்த்தையாகும்.

தீமோத்தேயு வேதவசனங்களை வாசிக்கவேண்டும். வேதவசனங்களிலிருந்து ஜனங்களுக்குப் புத்திசொல்லவேண்டும். அவர்கள் என்ன செய்யவேண்டுமென்றும், அவர்கள் எதை விசுவாசிக்கவேண்டுமென்றும் தீமோத்தேயு அவர்களுக்குப் புத்திசொல்லவேண்டும். ஊழியக் காரர்களாகிய நம்மை யாரும் அசட்டைபண்ணக்கூடாது என்றால், கர்த்தர் நம்மிடத்தில் ஒப்புக் கொடுத்திருக்கிற ஊழியத்தை நாம் உண்மையாய் நிறைவேற்றவேண்டும். கர்த்தருடைய வசனத்திலிருந்து தெளிவாய்ப் புத்திசொல்லவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நாம் உண்மையுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும். நாம் இப்படி நடந்து கொள்ளும்போது ஒருவரும் நம்மை அசட்டைபண்ணமாட்டார்கள்.

கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர்கள், தாங்கள் செய்கிற ஊழியத்திற்கு தங்களைத் தகுதிப் படுத்திக்கொள்ளவேண்டும். வேதவசனத்தை வாசிக்கிறதில் கவனம் செலுத்தவேண்டும். உபதேசிக்கிற ஊழியத்தில் நாம் ஜாக்கிதையாயிருப்பது போல, வேதவசனத்தை வாசிக்கிறதிலும் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காருக்கு ஜெபமும், வேதவாசிப்பும் அவசியம் தேவை. இவ்விரண்டில் ஒன்றில் சரியாய் கவனம் செலுத்தாவிட்டாலும் ஊழியம் ஆசீர்வாதமாகயிருக்காது.

தீமோத்தேயு ஒரு சில காரியங்களில் அசதியாயிருக்கக்கூடாது என்று பவுல் அவருக்குக் கட்டளையிடுகிறார். ஊழியக் காரராகிய நமக்கு கர்த்தர் தம்முடைய வரத்தைக் கொடுத்திருக்கிறார். அந்த வரத்தைப்பற்றி நாம் அசதியாயிருக் கக்கூடாது. ஊழியக்காரரை எப்படி பிரதிஷ்டைபண்ண வேண்டுமென்று பவுல் இங்கு சொல்லுகிறார். "மூப்பராகிய சங்கத்தார் தீமோத்தேயுமேல் கைகளை வைத்தார்கள்" (1தீமோ 4:14).

இதுவே வேதாகம முறைப்படி ஒருவரை ஊழியத்திற்கு பிரதிஷ்டை பண்ணுகிற விதம். ஊழியக்காரர்மீது மூப்பராகிய சங்கத்தார் கைகளை வைக்கவேண்டும்.

கர்த்தருக்கு ஊழியம் செய்வது ஒரு வரம். இது கிறிஸ்துவின் வரம். கர்த்தர் தமக்காக ஊழியம் செய்கிற வரத்தை சபைக்குக் கொடுத்திருக்கிறார். கர்த்தரிடமிருந்து ஊழிய வரத்தைப் பெற்றிருக்கிற ஊழியக்காரர்கள், தங்களுக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிருக்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தைப்பற்றியும் அசதியா யிருக்கக்கூடாது. ஊழியத்தை அசதியாயும் செய்யக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு நமக்கு இருக்கவேண்டிய தகுதியைப்பற்றியும் அசதியாயிருக்கக்கூடாது. ஊழியக் காரர்கள் தேவபக்திக்கேதுவாக எப்போதும் முயற்சி பண்ணிக்கொண்டேயிருக்க வேண்டும். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு ஒவ்வொரு ஊழியக்காரரும் தங்களை எப்போதும் தகுதிப்படுத்திக் கொண்டேயிருக்கவேண்டும்.

தேவன் தம்முடைய ஊழியத்தை தீமோத்தேயுவுக்குக் கொடுத்திருக்கிறார். தீமோத்தேயு இந்த ஊழியத்தில் நிலைத்திருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு அவர் தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தரைப்பற்றி அறிகிற அறிவில் அவர் வளர்ச்சி பெறவேண்டும். தீமோத்தேயு தேவனுடைய அறிவில் தேறுகிறது யாருக்கும் விளங்கும்படியாக இருக்கவேண்டும். இதற்காக தேவன் தனக்குக் கொடுத்திருக்கிற ஊழிய வரத்தை அவர் சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அதிகமாய்த் தியானம்பண்ணவேண்டும். கர்த்தர் தங்களிடத்தில் நம்பி ஒப்புக்கொடுத்திருக்கிற ஊழியத்தை அதிகமாய்த் தியானம்பண்ணவேண்டும். ஊழியத்தைப்பற்றியே சிந்தித்துக்கொண்டு, ஊழியத்தில் நிலைத்திருக்கவேண்டும். இதனால் ஊழியக்காரர் ஊழியத்தில் தேறுவது யாருக்கும் விளங்கும்படியாக இருக்கும் (1தீமோ 4:15).

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு எச்சரிப்பின் வார்த்தையையும் கொடுக்கிறார். தீமோத்தேயு தன்னைக்குறித்தும், தான் கொடுக்கிற உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். உபதேசத்தில் நிலைத்திருக்கவேண்டும். இப்படி செய்யும்போது முதலாவது மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற தீமோத்தேயு, தன்னை இரட்சித்துக் கொள்ள முடியும். அதன்பின்பு தன் மூலமாய் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ள முடியும்.

மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணும் போது, நாம் முதலாவது நமக்கு நாமே பிரசங்கம்பண்ணிக்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுவதற்கு முன்பாக, அந்த வார்த்தைகளினால் நம்மை எச்சரிக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் நம்மைக் குறித்தும், நாம் கொடுக்கிற உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கை யாயிருந்து, இவைகளில் நிலை கொண்டிருக்கவேண்டும். அப்போதுதான் நமக்கும் இரட்சிப்பு உண்டு. நம்முடைய உபதேசத்தைக் கேட்பவர்களுக்கும் இரட்சிப்பு உண்டு. முதலாவது தங்களுக்கும், பின்பு மற்றவர்களுக்கும் உபதேசம்பண்ணுகிறவர்களின் ஊழியம் ஆசீர்வாதமாயிருக்கும்.

5 அதிகாரம்

ஒவ்வொருவரையும் எப்படி கடிந்துகொள்ளவேண்டுமென்று பவுல் தீமோத்தேயுவுக்குப் புத்திசொல்லுகிறார் (1தீமோ 5:1,2). விதவைகளைக் கனம்பண்ணவேண்டும் (1தீமோ 5:3-14). மூப்பர்களை இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரராக எண்ணவேண்டும் (1தீமோ 5:17-19). பாவம் செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாக கடிந்து கொள்ளவேண்டும் (1தீமோ 5:20). மற்றவர்கள்மீது எப்படி கைகளை வைத்து ஆசீர்வதிக்கவேண்டுமென்பது பற்றிய ஆலோசனை (1தீமோ 5:21,22). தீமோத்தேயுவின் ஆரோக்கியத்தைப்பற்றிய காரியம் (1தீமோ 5:23). மனுஷனுடைய பாவம் அவனைப் பின்தொடரும் (1தீமோ 5:24,25).

புத்திசொல்லு 1தீமோ 5 : 1,2

1தீமோ 5:1. முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப்போலவும்,

1தீமோ 5:2. முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும், பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப்போலவும் பாவித்து, புத்திசொல்லு.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் புத்திசொல்லவேண்டும். மற்றவருக்குப் புத்திசொல்லுவது சந்தோஷமான அனுபவமல்ல. புத்திசொல்லுவதை சிலர் கேட்கமாட்டார்கள். ஆனாலும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள், தங்கள் ஊழியத்தின் ஒரு பகுதியாக, புத்திசொல்ல வேண்டும். மற்றவர்களைக் கடிந்து புத்திசொல்லும்போது மென்மையான வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டும்.

முதிர்வயதுள்ளவர்களைக் கடிந்து கொள்ளக்கூடாது. அவர்களை தகப்பன்மாரைப்போல பாவிக்கவேண்டும். அதுபோலவே பாலிய புருஷரை சகோதரரைப்போல பாவித்து, அன்போடும் கரிசனையோடும் புத்திசொல்லவேண்டும்.

ஊழியக்காரர்கள் மற்றவர்களுக்குப் புத்திசொல்லும்போது அவர்களிடத்தில் அதிகமான மனத்தாழ்மையிருக்கவேண்டும். பிறரைக் கடிந்துகொள்ளும்போது, தாங்களும் கடிந்துகொள்ளப்பட வேண்டியவர்கள் என்னும் எண்ணம் ஊழியக்காரர்களிடத்தில் காணப்பட வேண்டும். முதிர்வயதுள்ள ஸ்திரீகளை கடிந்துகொள்ளும்போது அவர்களை தாய்களைப்போல பாவித்து, கடிந்து கொள்ளவேண்டும். தேவைப்படும்போது பாலிய ஸ்திரீகளையும் கடிந்துகொள்ள வேண்டும். அப்போது அவர்களை எல்லா கற்புடன் சகோதரிகளைப்போல பாவித்து, அவர்களைக் கடிந்துகொண்டு, அவர்களுக்கு புத்திசொல்லவேண்டும்.

விதவைகள் 1தீமோ 5 : 3-16

1தீமோ 5:3. உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணு.

1தீமோ 5:4. விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது, பேரன் பேத்திகளாவது இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து, பெற்றார் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக்கொள்ளக்கடவர்கள்; அது நன்மையும் தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது.

1தீமோ 5:5. உத்தம விதவையாயிருந்து தனிமையாயிருக்கிறவள் தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவளாய், இரவும் பகலும் வேண்டுதல்களிலும் ஜெபங்களிலும் நிலைத்திருப்பாள்.

1தீமோ 5:6. சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்.

1தீமோ 5:7. அவர்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி இவைகளைக் கட்டளையிடு.

1தீமோ 5:8. ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.

1தீமோ 5:9. அறுபது வயதுக்குக் குறையாதவளும், ஒரே புருஷனுக்கு மனைவியாயிருந்தவளுமாகி,

1தீமோ 5:10. பிள்ளைகளை வளர்த்து, அந்நியரை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவி, உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவி செய்து, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து, இவ்விதமாய் நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவளுமாயிருந்தால், அப்படிப்பட்ட விதவையையே விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

1தீமோ 5:11. இளவயதுள்ள விதவைகளை அதிலே சேர்த்துக் கொள்ளாதே; ஏனெனில், அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்க் காமவிகாரங்கொள்ளும்போது விவாகம்பண்ண மனதாகி,

1தீமோ 5:12. முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே, ஆக்கினைக்குட்படுவார்கள்.

1தீமோ 5:13. அதுவுமல்லாமல், அவர்கள் சோம்பலுள்ளவர்களாய், வீடுவீடாய்த் திரியப்பழகுவார்கள்; சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல, அலப்புகிறவர்களாயும் வீணலுவற்காரிகளாயும் தகாத காரியங்களைப் பேசுகிறவர்களாயுமிருப்பார்கள்.

1தீமோ 5:14. ஆகையால் இளவயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்.

1தீமோ 5:15. ஏனெனில் இதற்குமுன்னே சிலர் சாத்தானைப் பின்பற்றி விலகிப்போனார்கள்.

1தீமோ 5:16. விசுவாசியாகிய ஒருவனிடத்திலாவது ஒருத்தியிடத்திலாவது விதவைகளிருந்தால், அவர்கள் இவர்களுக்கு உதவி செய்யக் கடவர்கள்; சபையானது உத்தமவிதவைகளானவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியதாகையால் அந்தப் பாரத்தை அதின்மேல் வைக்கக்கூடாது.

உத்தம விதவைகளாயிருக்கிறவர்களை கனம்பண்ணவேண்டும். அவர்களை ஆதரிக்கவேண்டும். அவர்களைப் பராமரிக்கவேண்டும். மிகுந்த மரியாதையோடும், அன்போடும், கரிசனையோடும் அவர்களுக்கு உதவிபுரியவேண்டும். உத்தம விதவையானவள் தனிமையாயிருந்தாலும், தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவளாய் இருக்கிறாள். தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவர்கள், இரவும் பகலும் வேண்டுதல்களிலும் ஜெபங்களிலும் நிலைத்திருக்கவேண்டும்.

சுகபோகமாய் வாழ்கிறவள் உத்தம விதவையல்ல. அவள் உயிரோடே செத்தவள் (1தீமோ 5:6). இவள் சபையில் ஜீவனுடையவளல்ல. ஜீவனில்லாத பிரேதத்தைப் போன்றவள். சுகபோகமாய் வாழ்கிற விதவையானவள், ஜீவனோடிருந்தாலும், அவள் சபைக்கு மரித்துப்போன அங்கத்தினரைப்போலவே இருக்கிறாள். இவர்களால் இப்பிரபஞ்சத்திலும் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. இவர்கள் உயிரோடிருக்கும்போதே, உயிரோடே அடக்கம்பண்ணப்பட்டவர்களைப்போல இருக்கிறார்கள். சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள் என்று பவுல் சொல்லுகிறார்.

ஒருசில விதவைகளுக்கு உற்றார் உறவினர்கள் இருப்பார்கள். அவர் களுக்கு பிள்ளைகளும், பேரன் களும், பேத்திகளும் இருப்பார்கள். இப்படிப்பட்ட விதவைகளை சபை பராமரிக்க வேண்டிய அவசியமில்லை. அவளுடைய குடும்பத்தாரே அவளை விசாரிக்க வேண்டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோரைக் கனப்படுத்தவேண்டும். அவர்களுடைய நன்மைகளை விசாரித்து, அவர்களுக்குத் தேவையான உபகாரங் களைச் செய்யும்போதுதான் பிள்ளைகள் அவர்களை மெய்யாகவே கனப்படுத்து கிறார்கள். இதுவே மெய்யான தேவபக்தி. பிள்ளைகள் தங்கள் பெற்றோரி டமிருந்து ஏராளமான உதவிகளைப் பெற்றிருக்கி றார்கள். இதற்கு ஈடாக பிள்ளைகளால் பெற்றோருக்கு எதையும் செலுத்தித் தீர்க்க முடியாது. ஆனாலும் பெற்றோர் தங்களுக்கு செய்த நன்மைகளுக்கு பதில் நன்மைகளைச் செய்ய பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும் (1தீமோ 5:4).

அப்போஸ்தலர் பவுல் இந்தக் கருத்தை மறுபடியுமாகச் சொல்லுகிறார். "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1தீமோ 5:8). "விசுவாசியாகிய ஒருவனிடத்திலாவது ஒருத்தியிடத்திலாவது விதவைகளிருந்தால், அவர்கள் இவர்களுக்கு உதவி செய்யக் கடவர்கள்; சபையானது உத்தமவிதவை களானவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியதாகையால் அந்தப் பாரத்தை அதின்மேல் வைக்கக்கூடாது" (1தீமோ 5:16).

ஒவ்வொரு விசுவாசியும் தன் சொந்த ஜனங்களை விசாரிக்கவேண்டும். விசேஷமாக தன் வீட்டாரை விசாரிக்க வேண்டும். தன்னைப் பெற்றெடுத்த வர்களை அன்பாய் விசாரிக்கவேண்டும். அவ்வாறு விசுவாசியாமற்போனால், அவர் விசுவாசத்தை மறுதலித்தவராகயிருப்பார் அதுமாத்திரமல்ல தன்னுடைய பெற்றோரை விசாரிக்காத விசுவாசி, அவிசுவாசியிலும் கெட்டவராகயிருப்பார்.

சபையானது யாருக்கெல்லாம் உதவிசெய்யவேண்டுமென்று தீர்மானம் பண்ணவேண்டும். நல்ல தீர்மானம் எடுப்பதற்கு தேவனுடைய உதவி தேவை. நம்மிடத்திலுள்ள பணத்தை தாறுமாறாக செலவுபண்ணக்கூடாது. பிறருக்கு உதவிசெய்தாலும் அதிலும் ஒரு ஒழுங்கும் கிரமமும் இருக்கவேண்டும். நாம் செய்கிற உதவி மெய்யாகவே பிரயோஜன முள்ளதாக இருக்கவேண்டும். சபைகள் உத்தம விதவைகளுக்கு நிச்சயம் உதவிசெய்யவேண்டும். அதே வேளையில் ஒரு விசுவாசியினிடத்தில் விதவைகள் இருக்கும்போது, சபை அந்த விதவைகளுக்கு உதவிசெய்வதற்குப் பதிலாக, அவர்களுடைய குடும் பத்திலுள்ள விசுவாசிகளே அவர்களுக்கு உதவி செய்யலாம்.

சபையானது உத்தம விதவைகளுக்கு உதவிசெய்யவேண்டும். விசுவாசிகளுக்கு பொருளாதார வசதியிருக்கும்போது, அவர்கள் தங்களிடத்திலுள்ள விதவைகளை சபையின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது. தாங்கள் செய்யவேண்டிய உபகாரத்தை, விசுவாசிகள் சபையின்மீது பாரமாக வைக்கக்கூடாது. விசுவாசிகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றும்போது, சபையின் பாரம் இலகுவாகயிருக்கும்.

சபையின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள, விதவைகளுக்கு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்று பவுல் ஆலோசனையாகச் சொல்லுகிறார். சபை எப்போதுமே நற்கிரியைகளைச் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். அதிலும் விசேஷமாக உதவிசெய்கிற விஷயத்தில் தாராளமாய் இருக்கவேண்டும். ஆனாலும் யாருக்கு உதவி செய்யவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிற விஷயத்திலும் சபை கவனம் செலுத்தவேண்டும்.

சரீரப்பிரகாரமாக நல்ல உடல் ஆரோக்கியத்தோடிருந்து, தங்கள் கைகளால் வேலை செய்ய முடிகிறவர்களுக்கு உதவி தேவைப்படாது. அப்படிப்பட்டவர்களை தங்கள் சொந்த வேலைகளைச் செய்து சாப்பிடுமாறு உற்சாகப்படுத்தவேண்டும். ஏற்கெனவே சபையின் மூலமாய் உதவி பெற்றவர்கள், இப்போது நல்ல நிலமையிலிருப்பார்களென்றால், அவர்கள் சபையின் உதவியை தொடர்ந்து எதிர்பார்க்கக் கூடாது. ஒரு காலத்தில் உதவி பெற்றிருந்தாலும், இப்போது நல்ல நிலமையிலிருப்பதினால், இவர்கள் இனிமேலும் சபையின் உதவியைப் பெற்றுக்கொள்ளாமல், மற்றவர்களுக்கு உதவிபுரியவேண்டும். தாங்கள் துன்பப்பட்டபோது இரக்கத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், நல்ல நிலமையிலிருக்கும்போது, துன்பப்படுகிற மற்றவர்களுக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும்.

சபையிலுள்ள உத்தம விதவையின் கூட்டத்திலுள்ளவர்கள் அறுபது வயதிற்கு குறையாதவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் ஒரே புருஷனுக்கு மனைவியாயிருந்திருக்கவேண்டும். நற்சாட்சி பெற்றவர்களாயிருக்கவேண்டும். பிள்ளைகளை வளர்ப்பது, அந்நியரை உபசரிப்பது, பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவுவது, ஆகிய விஷயங்களில் நற்சாட்சி பெற்றவளாயிருக்கவேண்டும். மேலும் உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவி செய்வது, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பிப்பது ஆகிய நற்கிரியைகளைக் குறித்தும் நற்சாட்சி பெற்றவளாயிருக்கவேண்டும். இப்படிப்பட்ட விதவைகளை மாத்திரமே, சபையிலுள்ள உத்தம விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம் (1தீமோ 5:9,10).

ஒரு சில விதவைகளை சபையிலுள்ள உத்தம விதவைகளின் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்றும் அப்போஸ்தலர் பவுல் ஆலோசனை சொல்லுகிறார். இளவயதுள்ள விதவைகளை அதிலே சேர்த்துக் கொள்ளக்கூடாது (1தீமோ 5:11). இவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய் காமவிகாரம் கொள்ளுவதற்கு வாய்ப்புள்ளது. இப்படிப்பட்டவர்கள் விவாகம்பண்ண மனதாகி, முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விட்டுவிடுவார்கள். ஆக்கினைக் குட்படுவார்கள். இப்படிப்பட்ட இளவயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணலாமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1தீமோ 5:14).

இளவயதுள்ள விதவைகள் சோம்பலுள்ளவர்களாயிருப்பார்கள். ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருப்பார்கள். சும்மாயிருப்பதும் கடினம். அதிக நேரத்திற்கு யாராலும் சும்மாயிருக்க முடியாது. சோம்பலுள்ள விதவைகள் வீடுவீடாய் திரியப்பழகுவார்கள். இவர்கள் அலப்புகிறவர்களாயும், வீண் அலுவற்காரிகளாயும், தகாத காரியங்களை பேசுகிறவர்களாயும் இருப்பார்கள் (1தீமோ 5:13). தேவையில்லாத காரியங்களைப் பேசி மற்ற குடும்பங்களில் குழப்பத்தை உண்டுபண்ணிவிடுவார்கள். வீடுவீடாய்த் திரிகிறவர்கள் சமாதானம் பண்ண மாட்டார்கள். சண்டைபோடுவார்கள். இவர்கள் அலப்புகிறவர்களாயும், தகாத காரியங்களையும் பேசுகிறவர்களாயும் இருப்பதினால், இயேசுகிறிஸ்துவின் நாமம் இவர்கள் மூலமாய் தூஷிக்கப்படுகிறது. ஆனாலும் உத்தம விதவைகளுக்கு உதவிசெய்வது சபையின் கடமை.

ஆதித்திருச்சபையில் உத்தம விதவைகளை அன்போடு விசாரித்தார்கள். அவர்களை ஆதரித்தார்கள். ஆதித்திருச்சபை உத்தம விதவைகளுக்கு பெரிய அளவில் உதவியாயும் ஆதரவாயும் இருந்தது. ஆதித்திருச்சபையைப்போலவே, தற்காலத்து திருச்சபைகளும் உத்தம விதவைகளுக்கு உதவிபுரியவேண்டும்.

விதவைகளுக்கு உதவிபுரிகிற விஷயத்தில், தற்காலத்து திருச்சபைகள், ஆதித்திருச்சபையின் முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும். யாருக்கு உதவி அதிகமாய்த் தேவைப்படுகிறதோ அவர்களுக்கு கருத்தாய் உதவிசெய்ய வேண்டும்.

சபையின் பொருளாதாரத்தை இதுபோன்ற காரியங்களுக்குப் பயன்படுத்தும்போது, இதற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டவர்களிடம், பயமும், பக்தியும், உக்கிராணத்துவமும் தேவை. கொடுக்கிறவர்கள் மாத்திரமல்ல, உதவியைப் பெற்றுக்கொள்கிறவர்களும் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். சபையின் மூலமாய் உதவிகளைப் பெற்றுக்கொண்டவர்கள், சாட்சியில்லாமல் தாறுமாறாய் ஜீவிக்கும் போது, சபையின் நற்பெயருக்கு களங்கமுண்டாகும்.

உதவி செய்வதிலும் இப்படிப்பட்ட பொறுப்பு இருப்பதினால், சபை மிகுந்த கவனத்தோடு உதவிபெறுகிறவர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். சபையின் மூலமாய் உதவி பெற்றுக்கொள்கிற வர்களுடைய நற்சாட்சியின் மூலமாய் தேவனுடைய நாமம் மகிமைப்படும். சபைக்கு நற்பெயர் உண்டாகும். சபையிலிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்கிறவர்கள் துன்மார்க்கராய் ஜீவிப்பார்களென்றால், தேவனுடைய நாமம் தூஷிக்கப்படும், சபையின் நற்பெயரும் களங்கப்படுத்தப்படும்.

உத்தம விதவைகளுக்குத் தேவைப்படுகிற எல்லா உதவிகளையும் சபையே செய்யவேண்டும் என்னும் பிரமாணம் எதுவும் நியமிக்கப்படவில்லை. ஆதரவில்லாத விதவைகளுக்கு சபை உதவி செய்யலாம். விதவைகளுடைய பிள்ளைகளோ, அல்லது உற்றார் உறவினரோ விசுவாசிகளாகவும், வசதியுள்ளவர்களாகவும் இருக்கும்போது, அவர்களே தங்கள் விதவைகளுக்கு உதவிசெய்யலாம். தாங்கள் உதவிசெய்வதன் மூலமாய் சபையின் பாரத்தைக் குறைக்கலாம்.

மூப்பர் 1தீமோ 5 : 17-20

1தீமோ 5:17. நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்.

1தீமோ 5:18. போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே.

1தீமோ 5:19. மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக்கொள்ளக்கூடாது.

1தீமோ 5:20. மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி, பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்.

சபையானது உத்தம விதவைகளுக்கு உதவிசெய்வது போலவே, ஊழியக் காரர்களுக்கும் ஆதரவு கொடுக்க வேண்டும். அவர்களை இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரராக எண்ணவேண்டும். நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை கனப்படுத்தவேண்டும். திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை கனப்படுத்தவேண்டும். ஆதித்திருச் சபையில் விசாரணை செய்வதற்கு தனியாக மூப்பர் என்றும், வசனத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு தனியாகப் போதகர் என்றும் தனித்தனி ஊழியக்காரர்கள் இல்லை. இவ்விரண்டு ஊழியங்களையும், ஒரே ஊழியக்காரரே பொறுப்பாய் செய்து வந்தார்.

ஊழியக்காரருக்கு ஊழியத்தில் இரண்டு பகுதிகள் உண்டு. அவர்கள் சபையை ஆளுகை செய்யவேண்டும். திருவசனத்தை உபதேசம்பண்ணவேண்டும். சத்திய உபதேசத்தைப் போதிக்கவேண்டும். ஊழியக்காரர்கள் ஒரு ஊழியமும் செய்யாமல் சும்மாயிருக்கக்கூடாது. சபையை நன்றாய் விசாரணை செய்கிற ஊழியக்காரரையும், திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிற ஊழியக்காரரையும் அதிகமாய்க் கனப்படுத்தவேண்டும். அவர்கள் இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரமுள்ளவர்கள்.

போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிறது. தேவன் போரடிக்கிற மாட்டையும் பராமரிக்கிறார். தம்முடைய ஊழியக்காரரையும் பராமரிக்கிறார். அப்பம் செய்வதற்குத் தேவையான தானியத்தை மாடு போரடித்துக் கொடுக்கிறது. தானியத்தினால் செய்யப்படும் அப்பம் அழிந்துபோகும். ஆனால் கர்த்தருடைய ஊழியக்காரரோ, ஜீவஅப்பத்தை நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஊழியம் செய்கிறார். ஜீவஅப்பத்தை நமக்குப் பிட்டுக்கொடுக்கிறார். ஜீவஅப்பமே நித்திய அப்பம். தானியத்தினால் செய்யப்படும் அப்பம் அழிந்துபோகிற அப்பம்.

நம்முடைய ஊழியக்காரரை நாம் ஒருபோதும் பட்டினியாகப் போட்டுவிடக் கூடாது. அவர்களுடைய தேவைகளைச் சந்திக்காமல், அவரை விசாரிக்காமல், அவரை ஆதரவற்ற அனாதைபோல கைவிட்டுவிடக்கூடாது. நமக்கு ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களை நாம் விசாரிக்கவில்லையென்றால், கர்த்தர் நம்மிடத்தில் கணக்கு கேட்பார்.

சில சமயங்களில் ஊழியக்காரருக்கு விரோதமாக சிலர் குற்றம் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட காரியங்களை எவ்வாறு நிதானமாய்த் தீர்க்கவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். மூப்பருக்கு விரோதமாக ஒருவர் குற்றம் சொல்லும்போது, அந்தக் குற்றம் ஆதாரமில்லாத யூகமாகயிருக்குமென்றால், அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. யூகத்திற்கு முக்கித்துவம் கொடுக்கக்கூடாது. மூப்பருக்கு விரோதமாக ஒருவர் பிராது கொடுக்கும்போது, அதை இரண்டு மூன்று சாட்சிகள் உறுதிபண்ணவேண்டும். மூப்பர்மீது குற்றம் சாட்டுகிறவர் நேருக்கு நேராக வந்து, அவருக்கு முன்பாக குற்றம் சொல்லவேண்டும். ஊழியக்காரர்மீது சொல்லப்படும், வீண்வதந்திகளையும், கட்டுக்கதைகளையும் நாம் நம்பக்கூடாது. அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை ஏற்றுக்கொண்டு, மூப்பரை விசாரிக்கவும் கூடாது.

ஒருவருக்கு விரோதமாக சொல்லப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப் படும்போது, பாவம் செய்தவர்களை மிகவும் கவனமாகக் கடிந்துகொள்ளவேண்டும். மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி, பாவம் செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்ளவேண்டும் (1தீமோ 5:20). சிறிய காயத்திற்கு சிறிய கட்டுப்போட்டால் போதுமானது. அதேவேளையில் காயம் பெரிதாகயிருக்கும்போது, காயத்தின் அளவுக்குத்தக்கதாக கட்டும் பெரிதாகயிருக்கவேண்டும். அப்போதுதான் காயம் குணமடையும்.

பாவம் செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்ளவேண்டும். அப்போது மற்றவர்களுக்கும் பயமுண்டாகும். தாங்களும் பாவம் செய்தால், தாங்களும் எல்லோருக்கும் முன்பாகக் கடிந்துகொள்ளப்படுவோம் என்னும் பயம் அவர்களுடைய உள்ளத்தில் நிரம்பியிருக்கும். எல்லோருக்கும் முன்பாகக் கடிந்துகொள்வதினால் மற்றவர்களுக்கும் நன்மை உண்டாகிறது. கடிந்துகொள்ளப்படுகிறவர்களுக்கும் நன்மை உண்டாகிறது.

தீமோத்தேயுவுக்கு கட்டளை 1தீமோ 5 : 21-25

1தீமோ 5:21. நீ பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யாமலும், விசாரிக்குமுன் திருணயம் பண்ணாமலும், இவைகளைக் காத்து நடக்கும்படி, தேவனுக்கும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், தெரிந்துகொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாக, உறுதியாய்க் கட்டளையிடுகிறேன்.

1தீமோ 5:22. ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும்பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானாக காத்துக்கொள்.

1தீமோ 5:23. நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்.

1தீமோ 5:24. சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயத் தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்; சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும்.

1தீமோ 5:25. அப்படியே சிலருடைய நற்கிரியைகளும் வெளியரங்க மாயிருக்கும்; அப்படி இராதவைகளும் மறைந்திருக்கமாட்டாது.

ஒருவர்மேல் கைகளை வைப்பது என்பது அவரை ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணுவதற்கு அடையாளம். வேதபண்டிதர்களில் சிலர் இந்த வாக்கியத்திற்கு வேறுவிதமாயும் பொருள் சொல்லுகிறார்கள். ஒருவர்மேல் கைகளை வைப்பது என்பதற்கு அவரை மன்னிப்பதற்கு அடையாளம் என்று பொருள் என்று சொல்லுகிறார்கள். ஒருவர்மேல் கைகளை வைப்பதற்கு அவசரம் காண்பிக்கக்கூடாது.

அவசரப்படுகிறவர்கள் பாவத்தில் விழுந்துவிடுவார்கள். மற்றவர்கள் செய்கிற பாவங்களிலும் பங்காளிகளாக யிருப்பார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களைச் சுத்தவான்களாகக் காத்துக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படக்கூடாது (1தீமோ 5:22).

மற்றவர்கள் தங்களுக்கு விரோதமாக தப்பிதம் செய்யும்போது, ஊழியக்காரர்கள் அவர்கள் செய்த தப்பிதங்களை மன்னித்துவிடவேண்டும். சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாகயிருக்கும். அவர்கள் செய்த பாவங்களை நிரூபிக்கவேண்டிய அவசியமே இருக்காது. அந்தஅளவுக்கு அவர்கள் வெளியரங்கமாகவும் துணிகரமாகவும் பாவம் செய்வார்கள். இவ்வாறு பாவம் செய்தவர்களை சபையார் எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்ளவேண்டும். இதனால் பாவம் செய்வதைக் குறித்து இவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பயமுண்டாகும்.

ஒரு சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிராமல் அந்தரங்க மாயிருக்கும். ஆனாலும் அவர்களால் பாவத்தை நீண்டநாளுக்கு மறைத்து வைக்க முடியாது. வெளியரங்கமாகாத பாவம் எதுவுமில்லை. எல்லாம் ஏற்றகாலத்தில் வெளியரங்கமாகும். வெளியரங்கமாக பாவம் செய்தவர்கள் சபையார் எல்லாருக்கும் முன்பாக கடிந்துகொள்ளப்படுவார்கள். அந்தரங்க மாகப் பாவம் செய்தவர்களை யாரும் கடிந்துகொள்ள மாட்டார்கள். அவர்களுடைய பாவம் யாருக்கும் தெரியாது. ஆனாலும் அவர்களுடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும்.

பாவங்களில் வெளியரங்கமான பாவங்களும் உண்டு. அந்தரங்கமான பாவங்களும் உண்டு. பாவம் செய்தவர்களில் சிலர் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, மனந்திரும்பி, பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வார்கள். ஆனால் வேறு சிலரோ தாங்கள் செய்த அந்தரங்க பாவங்களை மறைத்துவிடுவார்கள். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவற்றை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ தேவனுடைய சமுகத்தில் இரக்கம் பெறுவான். நம்முடைய பாவம் வெளியரங்க மாகயிருந்தாலும், அந்தரங்கமாயி ருந்தாலும், அதற்கேற்ற தண்டனை உண்டு. பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபை வரமோ கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வருகிற ஆத்தும இரட்சிப்பு (1தீமோ 5:24).

ஒரு சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருப்பதுபோல சிலருடைய நற்கிரியைகளும் வெளியரங்கமாயிருக்கும். ஒரு சிலருடைய பாவங்கள் அந்தரங்க மாயிருப்பதுபோல, ஒரு சிலருடைய நற்கிரியைகளும் அந்தரங்கமாயிருக்கும். தேவன் நம்முடைய நற்கிரியைகளுக்கு ஏற்ற பலனை நிச்சயமாய்க் கொடுப்பார். நம்முடைய நற்கிரியைகள் வெளியரங்க மாயிருந்தாலும், அந்தரங்கமாயிருந்தாலும், நம்முடைய தேவன் நம்முடைய நற்கிரியைகளுக்கு ஏற்ற பலனை வெளியரங்கமாய்க் கொடுப்பார் (1தீமோ 5:25).

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு தனிப்பட்ட முறையில் சில கட்டளைகளைக் கொடுக்கிறார். தீமோத்தேயு தன்னுடைய ஊழியத்தைக் கவனமாய்ச் செய்யவேண்டும். அவர் பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யக் கூடாது. எந்தக் காரியத்தையும் தீரவிசாரிக்கும் முன்பு நிர்ணயம் பண்ணக்கூடாது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய ஊழியங்களைக் குறித்து கர்த்தருடைய சமுகத்தில் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். தங்களுடைய ஊழியத்தில் ஊழியக்காரர்கள் பட்சபாதத்தோடே நடந்துகொண்டால் அவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வருவது நிச்சயம்.

தீமோத்தேயு தன்னுடைய சரீர ஆரோக்கியத்தையும் காத்துக் கொள்ளவேண்டுமென்று பவுல் அவருக்கு ஆலோசனை சொல்லுகிறார். அவருடைய வயிற்றிற்காகவும் அவருக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், அவர் கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்ள வேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். ஊழியக்காரர்கள் தங்கள் சரீர ஆரோக்கியத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். சரீர ஆரோக்கியம் நன்றாயிருந்தால்தான் நம்மால் நன்றாய் ஊழியம் செய்ய முடியும். தேவனுடைய ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்வதற்கு நம்முடைய நல்ல ஆரோக்கியம் நமக்கு உதவியாயிருக்கும்.

திராட்சரசத்தை நம்முடைய சரீர ஆரோக்கியத்திற்கு உதவியாக பயன்படுத்தவேண்டும். திராட்சரசம் நமக்கு உபத்திரவமாக மாறிவிடக்கூடாது. குடித்து வெறித்திருப்பது தேவனுடைய சித்தமல்ல. ஆனாலும் சரீர பலவீனத்திற்காக கொஞ்சம் திராட்சரசத்தைக் கூட்டிக் கொள்ளலாமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். சரீரத்தின் நல்ல ஆரோக்கியத்திற்கு பிரயோஜன முண்டாகும்படி திராட்சரசத்தைக் கொஞ்சம் சேர்த்துக்கொள்ளலாம். இதை எவ்வளவு சேர்த்துக்கொள்ளலாம் என்பதில் விசுவாசிகளும் ஊழியக்காரர்களும் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். சரீர இச்சையை நிறைவேற்றுவதற்கு திராட்சரசத்தைப் பயன்படுத்தாமல், சரீர ஆரோக்கியத்திற்கு உதவியாக கொஞ்சம் திராட்சரசத்தைப் பயன்படுத்தலாம்.

6 அதிகாரம்

வேலைக்காரரின் கடமைகள் (1தீமோ 6:1,2). கள்ளப்போதகர்கள் (1தீமோ 6:3-5). தேவபக்தியும் பணஆசையும் (1தீமோ 6:6-10). தீமோத்தேயு நாடவேண்டிய காரியங்களும், விட்டு ஓடவேண்டிய காரியங்களும் (1தீமோ 6:11,12). தீமோத்தேயுவுக்குக் கட்டளை (1தீமோ 6:13-16). ஐசுவரியவான்களுக்குக் கட்டளை (1தீமோ 6:17-19). தீமோத்தேயுவுக்கு கட்டளை (1தீமோ 6:20,21).

வேலைக்காரர் 1தீமோ 6 : 1,2

1தீமோ 6:1. தேவனுடைய நாமமும் உபதேசமும் தூஷிக்கப்படாதபடிக்கு, அடிமைத்தன நுகத்திற்குட்பட்டிருக்கிற வேலைக்காரர் யாவரும் தங்கள் எஜமான்களை எல்லாக் கனத்திற்கும் பாத்திரரென்று எண்ணிக் கொள்ளக்கடவர்கள்.

1தீமோ 6:2. விசுவாசிகளாகிய எஜமான்களை உடையவர்கள், தங்கள் எஜமான்கள் சகோதரராயிருக்கிறதினாலே அவர்களை அசட்டைபண்ணாமல், நல்வேலையின் பலனைப் பெற்றுக்கொள்ளுகிற அவர்கள் விசுவாசிகளும் பிரியருமாயிருக்கிறபடியால், அவர்களுக்கு அதிகமாய் ஊழியஞ் செய்யக்கடவர்கள்; இந்தப்படியே போதித்துப் புத்திசொல்லு.

வேலைக்காரரின் கடமைகளைப்பற்றி பவுல் இங்கு எழுதுகிறார். அவர்கள் அடிமைத்தன நுகத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள். அடிமைத்தன நுகம் என்பது வேலை செய்கிற நுகத்தைக் குறிப்பிடுகிறது. வேலைக்காரர்கள் வேலை செய்கிற நுகத்திற்குட்பட்டிருக்கிறார்களேயல்லாமல், சும்மாயிருக்கிற நுகத்திற்குட்படவில்லை. வேலைக்காரர் தங்கள் எஜமான்களைக் கனம்பண்ணவேண்டும். தங்கள் எஜமான்களை எல்லா கனத்திற்கும் பாத்திரர் என்று எண்ணி அவர்களைக் கனப்படுத்தவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய எல்லா மரியாதையையும் கொடுக்கவேண்டும்.

வேலைக்காரர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்தவ விசுவாசிகளாயிருக்கும்போது, அவர்களிடத்தில் நற்குணங்கள் வெளிப்படவேண்டும். விசுவாசிகளாகிய வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவர்களுடைய கீழ்ப்படியாமை இயேசு கிறிஸ்துவின் நாமத்தைத் தூஷிக்கும். கீழ்ப்படியாத வேலைக்காரர்கள் நிமித்தமாய் கிறிஸ்தவ உபதேசத்திற்கு அவப்பெயர் உண்டாகும்.

விசுவாசிகள் நற்குணமில்லாதவர்களாக ஜீவிக்கும்போது தேவனுடைய நாமமும், உபதேசமும் தூஷிக்கப்படும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் துன்மார்க்கமாய் ஜீவித்தால், அவர்களுடைய நாமம் தூஷிக்கப்படுவதோடு, அவர்கள் பிரசங்கிக்கிற கிறிஸ்துவின் உபதேசமும் தூஷிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோருமே நல்நடத்தையுடையவர்களாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

சில சமயங்களில் எஜமான்களும், வேலைக்காரரும் கிறிஸ்தவ விசுவாசிகளாயிருப்பதற்கு வாய்ப்புள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் விசுவாசியாயிருக்கிற வேலைக்காரர்கள், விசுவாசிகளாகிய எஜமான்களை அசட்டைபண்ணக்கூடாது. தங்கள் எஜமான்களுக்கு வேலைக்காரர்கள் அதிகமாய் ஊழியம் செய்யவேண்டும். வேலைக்காரரின் கீழ்ப்படிதலும், அவர்களுடைய அதிகமான ஊழியமும் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும். விசுவாசிகளாகிய எஜமான்களும், விசுவாசிகளாகிய வேலைக்காரரும் சகோதரராயிருக்கிறார்கள். இவர்கள் இருவருமே நல்வேலையின் பலனைப் பெற்றுக்கொள்கிறார்கள். எஜமான்களும் வேலைக்காரரும் தங்களுக்குக் கிடைக்கிற லாபத்தில் பங்காளிகளாயிருக்கிறார்கள். வேலைக்காரர் இதையெல்லாம் நினைத்துப் பார்த்து, தங்கள் எஜமான்களுக்கு அதிகமாய் ஊழியம் செய்யவேண்டும்.

கள்ளப்போதகன்
1தீமோ 6 : 3-5

1தீமோ 6:3. ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால்,

1தீமோ 6:4. அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும்பற்றி நோய்கொண்டவனுமாயிருக்கிறான்; அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களுமுண்டாகி,

1தீமோ 6:5. கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு.

கிறிஸ்துவின் உபதேசத்தைப் போதிக்காமல் வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவர்களைவிட்டு, தீமோத்தேயு விலகிப்போகவேண்டுமென்று பவுல் அவருக்குப் புத்திசொல்லுகிறார். "ஒருவன் வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால்" (1தீமோ 6:3) என்று கள்ளப்போதகனைப்பற்றிச் சொல்லுகிறார். நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களை மாத்திரமே கேட்கவேண்டும். அந்த வசனங்களுக்கு மாத்திரமே கீழ்ப்படியவேண்டும். மற்ற எந்தவிதமான வசனங்களுக்கும், வேற்றுமையான எந்த உபதேசங்களுக்கும் நாம் கீழ்ப்படியவேண்டிய அவசியம் எதுவுமில்லை.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான உபதேசங்களைப் போதிக்காமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவன் இறுமாப்புள்ளவனாயிருக்கிறான் (1தீமோ 6:4). அவனுக்கு தேவனைப்பற்றிய அறிவு இல்லை. அவன் ஒன்றும் அறியாதவன். பொதுவாகவே இறுமாப்புள்ளவன் அறிவில்லாதவனாகவே இருப்பான். கிறிஸ்துவின் உபதேசம் ஆரோக்கியமான உபதேசம். அது தேவபக்திக்கேற்ற உபதேசம். கிறிஸ்துவின் உபதேசம் குழப்பமில்லாமல் தெளிவாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான உபதேசங்களுக்குக் கீழ்ப்படியாதவர்கள், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும் பற்றிக்கொள்வார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களுக்குக் கீழ்ப்படியாதவர்கள், தங்களைத் தாங்களே பெருமைப்படுத்துவார்கள். இறுமாப்புள்ளவர் களாயிருப்பார்கள். தங்களுடைய வார்த்தையே மெய்யான உபதேசமென்று ஆணவமாய்ப் பேசுவார்கள். இப்படிப் பட்டவர்கள் சபையில் களைகளை விதைத்துவிடுவார்கள். கர்த்தருடைய ஆரோக்கியமான வசனங்களுக்குக் கீழ்ப்படியாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவர்களினால், சபையில் பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களும் உண்டாகும் (1தீமோ 6:4).

கெட்ட சிந்தையுள்ளவர்கள் சத்திய மில்லாதவர்களாயிருக்கிறார்கள் (1தீமோ 6:5). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் ஆரோக்கியமான வார்த்தைகள். இவை சபையில் ஏற்பட்டிருக்கிற காயங்களைக் குணமாக்கும். சபைக்குள் நோய்கள் பரவாதவாறு தடுத்து நிறுத்தும். மனச்சாட்சியில் காயமுண்டாயிருக்கு மானால் அந்தக் காயத்தைக் கர்த்தருடைய ஆரோக்கியமான வார்த்தை குணப்படுத்தும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் வேறு எந்த வார்த்தையையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் தங்களையும் நம்பமாட்டார்கள். மற்றவர்களையும் நம்பமாட்டார்கள். கர்த்தருடைய வார்த்தையைக் குறித்து எப்போதும் தர்க்கமும் வாக்குவாதமும் பண்ணுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவபக்தியை ஆதாயத்தொழில் என்று எண்ணுவார்கள். மாறுபாடான உபதேசங்களைப் போதிக்கிறவர்களை விட்டு, கர்த்தருடைய பிள்ளைகள் விலகி வந்துவிடவேண்டும்.

போதுமென்கிற மனது
1தீமோ 6 : 6-8

1தீமோ 6:6. போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.

1தீமோ 6:7. உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்.

1தீமோ 6:8. உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்.

கிறிஸ்தவ மார்க்கம் ஆதாயம்பண்ணுகிற வியாபாரமல்ல. தேவபக்தியானது ஆதாயத்தொழிலும் அல்ல. ஆனால் ஒரு சிலர் தேவபக்தியை ஆதாயத்தொழில் என்று எண்ணு கிறார்கள். இவர்கள் கெட்ட சிந்தையுள்ளவர்கள். சத்தியமில்லாதவர்கள். தேவபக்தியை இவர்கள் ஆதாயத்தொழில் என்று எண்ணினாலும், இவர்களுக்கு ஒரு ஆதாயமும் கிடைக்கப்போவதில்லை.

போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் (1தீமோ 6:6). தேவபக்தியே மிகுந்த ஆதாயம். எங்கெல்லாம் உண்மையான தேவபக்தியிருக்கிறதோ அங்கெல்லாம் போதுமென்கிற மனதும் இருக்கும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்குப் போதுமென்கிற மனது இருக்கவேண்டும். இதுவே நமக்கு மிகுந்த ஆதாயம். தேவபக்தியுள்ளவர்கள் பரலோகத்தில் சந்தோஷமாயிருப்பார்கள். இப்பிரபஞ்சத்தில் தங்களுக்கு எது இருக்கிறதோ, அதுவே தங்களுக்கு போதுமென்று திருப்தியோடிருப்பார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் உலகப்பொருளுக்கு பேராசைப்படக்கூடாது. தேவபக்தியை ஆதாயத்தொழில் என்று எண்ணக்கூடாது. இப்பிரபஞ்சத்தின் காரியங்கள்மீது அதிகமாய் ஆசைப்படக்கூடாது. தேவபக்தியும் போதுமென்கிற மனதும் எப்போதும் இணைந்திருக்கும். இவ்விரண்டையும் பிரிக்க முடியாது. பவுலைப்போன்ற பரிசுத்தவான்களுக்கு இந்தத் தெய்வீக இரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பவுல் எல்லா சூழ்நிலையிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டார். அவரிடத்தில் போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியிருந்தது. அதுவே அவருக்கு மிகுந்த ஆதாயமாயிற்று.

போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்பதற்கான காரணத்தையும் பவுல் இங்கு வெளிப்படுத்துகிறார். நாம் இந்த உலகத்திலே ஒன்றும் கொண்டு வந்ததில்லை. இந்த உலகமானது நமக்கு எந்த விஷயத்திலும் கடன்பட்டிருக்கவில்லை. நாம் இந்த உலகத்திற்கு வந்தபோது ஒன்றும் கொண்டுவராமல் வெறுமையாகவே வந்தோம். இப்போது நமக்கு ஏதாவது இருக்குமென்றால், அது தேவனுடைய கிருபையினால் நமக்குக் கிடைத்திருக்கிற தெய்வீக பராமரிப்பு. இந்த ஆசீர்வாதத்திற்காக நாம் கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும்.

நாம் இந்த உலகத்தில் வந்தபோது ஒன்றும் கொண்டுவந்ததில்லை. நமக்கு இப்போதிருக்கிற நிலமையையும், நாம் இந்த உலகத்தில் வந்தபோது இருந்த நிலமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்போது நாம் யாருமே ஏழைகளாகயிருக்க முடியாது. ஏனெனில் நாம் உலகத்திலே வந்தபோது ஒன்றுமே கொண்டுவரவில்லை. நம்மிடத்தில் அப்போது ஒன்றுமேயில்லை. இப்போது நம்மிடத்தில் ஏதாவது இருக்குமென்றால், அது நமக்கு லாபமே ஒழிய ஒருபோதும் நஷ்டமாயிராது.

நாம் உலகத்தில் வந்தவேளையிலிருந்து, இப்போது வரையிலும் கர்த்தர் நம்மை போஷித்து பராமரித்து வழிநடத்தி வந்திருக்கிறார். இது வரையிலும் வழிநடத்தியவர் இனிமேலும் வழிநடத்துவார் என்று நாம் கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும். நாம் உலகத்திலே வந்தபோது ஒன்றும் கொண்டு வந்ததில்லை. அதுபோலவே இந்த உலகத்திலிருந்து நாம் போகும்போதும், இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். இந்த உலகத்திலிருந்து நாம் புறப்பட்டுப் போகும்போது ஒன்றும் கொண்டுபோக மாட்டோம். ஆகையினால் போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே நமக்கு மிகுந்த ஆதாயம்.

நம்மிடத்தில் கொஞ்சம் இருந்தாலும் அதுபோதுமென்று திருப்தியோடிருக்கவேண்டும். நம்மிடத்தில் இப்போது எவ்வளவு இருந்தாலும், இந்த உலகத்தைவிட்டுப் போகும்போது, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போகப்போவதில்லை என்பதை அறிந்திருக்கவேண்டும். உலகத்தில் நாம் வெறுமையாய் வந்ததுபோல, இந்த உலகத்திலிருந்து வெறுமையாய்ப் போகப்போகிறோம். நம்மிடத்திலுள்ளது எல்லாவற்றையும் இங்கு விட்டுவிட்டுத்தான் போகப்போகிறோம்.

தேவன் நமக்கு அன்றாட ஆகாரத்தைக் கொடுத்து, நம்மைப் போஷித்து பராமரிக்கும்போது, நாம் அதில் போதுமென்கிற மனதுடன் திருப்தியாயிருக்கவேண்டும். நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கையில் நமக்கு ஏராளமான ஐசுவரியங்கள் இருக்கலாம். நமக்கு எவ்வளவு ஐசுவரியங்கள் இருந்தாலும், நாம் மரிக்கும்போது, இவையெல்லாவற்றையும் இங்கே விட்டுவிட்டுத்தான் போகவேண்டும். இவ்வுலக காரியங்களின்மீது நாம் எவ்வளவுதான் ஆசை வைத்திருந்தாலும், நாம் மரித்தபின்பு இவற்றில் எதுவும் நம்மோடு கூடவரப்போவதில்லை.

ஆகையினால் உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்று இருக்கக்கடவோம் (1தீமோ 6:8). நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் வரையிலும் நம்முடைய அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்பட்டால் போதுமென்கிற மனதுடனே திருப்தியோடிருக்கவேண்டும். உலக ஐசுவரியத்தில் சந்தோஷப்படுவதற்குப் பதிலாக, கர்த்தருடைய காரியங்களில் நாம் சந்தோஷப்படவேண்டும்.

பணஆசை 1தீமோ 6 : 9,10

1தீமோ 6:9. ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.

1தீமோ 6:10. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஐசுவரியவானாயிருப்பது பாவமல்ல. ஆனாலும் ஐசுவரிவான்களாக விரும்பு கிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் விழுந்து விடுகிறார்கள். ஐசுவரிய வான்களாக விரும்புகிறவர்கள் இப்பிரபஞ்சத்தின் சொத்துக்கள்மீது நம்பிக்கை வைக்கிறார்கள். இவர்களுடைய உண்மையான சந்தோஷம் ஐசுவரியத்தில்தான் இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஐசுவரிவான்களாக விரும்புகிறோம் என்பதை சாத்தான் கண்டுகொண்டவுடன், நம்மை சோதனையிலும் கண்ணியிலும் விழ வைத்துவிடுவான். மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளில் சத்துரு நம்மை விழ வைத்துவிடுவான். இதனால் மனுஷர் கேட்டிலும் அழிவிலும் அமிழ்ந்துபோவார்கள்.

ஒரு சிலர் ஐசுவரியவான் களாகயிருக்கிறார்கள். ஐசுவரியவான் களுக்கு ஆவிக்குரிய பாதுகாப்பு இல்லை. அவர்கள் பலவித இச்சைகளில் விழுந்துவிடுவதற்கு வாய்ப்புள்ளது. உலகப்பிரகாரமான இச்சைகள் மதிகேடானது. அது சேதத்தை உண்டுபண்ணும். ஐசுவரியம் மனுஷரை கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்திவிடும்.

பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. ஒரு சிலரிடத்தில் பணம் இருக்கும். ஆனால் தங்களிடத்தில் இருக்கிற பணத்தில் அவர்கள் திருப்தியாயிருக்கமாட்டார்கள். இன்னும் அதிகமாய் பணம் வேண்டுமென்று பேராசைப்படுவார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் பணஆசையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். பணத்தை இச்சிக்கிறவர்கள் விசுவாசத்தை விட்டு வழுவிப் போய்விடுவார்கள். பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு விசுவாசம் ஒரு வழியென்று தவறாக நினைத்து விடுவார்கள். இதனால் பணஆசையுடையவர்கள் அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டி ருக்கிறார்கள் (1தீமோ 6:10). தேவனை விட்டு விலகுகிறவர்களும், விசுவாசத்தை விட்டு வழுவிப்போகிறவர்களும் தங்களுக்கு வேதனைகளைக் குவித்துக் கொள்கிறார்கள். தங்களுக்கு வருத்தத்தை வரவழைத்துக் கொள்கிறார்கள்.

நீயோ தேவனுடைய மனுஷனே 1தீமோ 6 : 11,12

1தீமோ 6:11. நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவ பக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.

1தீமோ 6:12. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்.

அப்போஸ்தலர் பவுல் பண ஆசையைப்பற்றி எச்சரித்துச் சொல்லிவிட்டு, இந்த விஷயத்தில் தீமோத்தேயுவும் எச்சரிப்போடிருக்க வேண்டும் என்று சொல்லுகிறார். தீமோத்தேயுவை, "தேவனுடைய மனுஷன்" என்று அழைக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தேவனுடைய மனுஷராயிருக்கிறார்கள். தேவனுடைய மனுஷர்கள் தங்கள் தகுதிக்கேற்ற பிரகாரமாக ஜீவிக்கவேண்டும். பண ஆசையைக் குறித்து தீமோத்தேயு எச்சரிப்போடிருக்கவேண்டுமென்று பவுல் அவருக்கு கட்டளை கொடுக்கிறார்.

தேவனுடைய மனுஷரின் இருதயத்தில் பணஆசையோ, இப்பிரபஞ்சத்தின் காரியங்களைப்பற்றிய பேராசையோ நிரம்பியிருக்கக்கூடாது. தேவனுடைய மனுஷரின் இருதயம் தேவனுடைய காரியங்களினால் நிரம்பியிருக்கவேண்டும். பண ஆசையை விட்டு விலகி ஓடவேண்டுமென்றால், நாம் சில காரியங்களை அடையும்படி நாடவேண்டும். பண ஆசையை விட்டு ஓடி, நன்மையானவற்றை அடையும்படி நாடவேண்டும்.

தேவனுடைய மனுஷர் பண ஆசையை விட்டு ஓடினால் மாத்திரம் போதாது. அவர்கள் நன்மையான காரியங்களை அடையும்படி நாடவும்வேண்டும். நீதியையும், தேவபக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்தகுணத்தையும் அடையும்படி நாம் நாடவேண்டும். இவையே இப்பிரபஞ்சத்தில் நமக்கு மேன்மையானவை. இவற்றைப் பெற்றுக்கொள்வதே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்குத் தகுதியானது.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவிடம், "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு" (1தீமோ 6:12) என்று புத்தி சொல்லுகிறார். தீமோத்தேயு ஒரு போர்வீரனைப்போல போராட வேண்டும். பரலோகத்திற்கு போகிறவர்கள், தங்கள் வழிகளில் போராடிக்கொண்டுதான் போகவேண்டும். நமக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது நல்ல போராட்டம். இதை "விசுவாசத்தின் நல்ல போராட்டம்" என்று பவுல் சொல்லுகிறார். நம்முடைய போராட்டத்திற்கான காரணமும் நல்லதுதான். போராட்டத்தின் முடிவும் நன்மையாகவே இருக்கும்.

தேவனுடைய மனுஷருக்கு விசுவாசத்தின் நல்ல போராட்டம் நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறும்போது நமக்கு நித்திய ஜீவன் கொடுக்கப்படும். நித்திய ஜீவனைப் பற்றிக்கொள் வதற்காகவே நாம் அழைக்கப் பட்டிருக்கிறோம். ஒரு சிலர் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடாமல், நித்திய ஜீவனை இழந்துபோகிறார்கள். விசுவாசிகளாகிய நாமோ விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளவேண்டும்.

கட்டளையிடுகிறேன்
1தீமோ 6 : 13-16

1தீமோ 6:13. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துபிரசன்னமாகும்வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளும்படிக்கு,

1தீமோ 6:14. எல்லாவற்றையும் உயிரோடிருக்கச்செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்தியு பிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப் பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

1தீமோ 6:15. அந்தப் பிரசன்ன மாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்,

1தீமோ 6:16. ஒருவராய், சாவாமை யுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு ஆவிக்குரிய கட்டளையிடுகிறார். கர்த்தருடைய கண்கள் நம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது. நாம் எப்படிப்பட்டவர்களென்றும், நாம் என்ன செய்கிறோம் என்றும் அவர் நம்மை நோக்கிப் பார்க்கிறார். கர்த்தரே எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிறவர். கர்த்தருடைய குணாதி சயங்களை நாம் தியானித்துப் பார்க்கும்போது, கர்த்தருக்காக நாம் செய்கிற ஊழியம் உயிர்பெறும்.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயு விடம் “நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளவேண்டும்” என்று கட்டளையிடுகிறார் (1தீமோ 6:13). பவுல் கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத் திலே தீமோத்தேயுவுக்குக் கட்டளையிடு கிறார் (1தீமோ 6:14). இயேசுகிறிஸ்து ஜீவபலியாக மாத்திரம் மரிக்கவில்லை. அவர் இரத்தசாட்சியாகவும் மரித்தார். பொந்தியுபிலாத்துவுக்கு முன்பாக இயேசுகிறிஸ்து விசாரிக்கப்பட்ட போது, தம்மைப்பற்றிய நல்ல அறிக்கையை சாட்சியாக விளங்கப்பண்ணினார். “என்னுடைய ராஜ்யம் இந்த உலகத்திற் குரியதல்ல” என்று இயேசுகிறிஸ்து பிலாத்துவுக்கு முன்பாக தெளிவாக சாட்சி சொன்னார்.

இயேசுகிறிஸ்து நல்ல அறிக்கையாகச் சொன்ன இந்தச் சாட்சியை கர்த்தருடைய பிள்ளைகள் தியானித்துப் பார்த்து, பணஆசையையும், உலக சிநேகத்தையும் விட்டு விலகிவர வேண்டும்.

தீமோத்தேயு எதற்காக அழைக்கப்பட்டார் என்பதை பவுல் அவருக்கு மறுபடியும் நினைவுபடுத்துகிறார். அநேக சாட்சிகளுக்கு முன்பாக தீமோத்தேயு நல்ல அறிக்கை பண்ணவேண்டும். தான் அழைக்கப்பட்ட அழைப்புக்கு தீமோத்தேயு பாத்திரவானாய் நடந்துகொள்ளவேண்டும். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும். நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

பவுல் தீமோத்தேயுவுக்குப் புத்திசொல்லும்போது, இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையை அவருக்கு ஞாபகப்படுத்துகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரசன்ன மாகுவார். அவருடைய பிரசன்னம் மகிமை நிறைந்ததாகயிருக்கும். அவர் மறுபடியும் வருவார். இயேசுகிறிஸ்து பிரசன்னமாகும் வரைக்கும், அவருடைய ஊழியக்காரர் களாகிய நாம் அவருடைய வருகையின்மீது கண்ணோக்கமாயிருக்க வேண்டும். அவர் வரும் வரையிலும் அவருடைய வருகையை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கவேண்டும்.

கர்த்தருடைய கற்பனையை ஒவ்வொரு விசுவாசியும் மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவின் வருகை நிச்சயம் உயிர்பெறும். ஆனாலும் அவருடைய வருகையின் காலமும் வேளையும் நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை. இயேசுகிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்ட வேளையில், நியமிக்கப்பட்ட காலத்தில் மறுபடியும் வருவார். அப்போது அவர் தம்முடைய மகிமையில் பிரசன்னமாகுவார். தேவன் தம்முடைய பிரசன்னமாகுதலை தம்முடைய காலங்களில் வெளிப் படுத்துவார் (1தீமோ 6:15).

அப்போஸ்தலர் பவுல் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றியும், பிதாவாகிய தேவனைப்பற்றியும் சத்தியமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். தேவன் ஒருவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியாயிருக்கிறார். அவரே சர்வவல்லமையுள்ளவர். இப்பூமியிலுள்ள ராஜாக்களின் வல்லமைகளெல்லாம் ராஜாதி ராஜாவாகிய கர்த்தாதி கர்த்தரிடமிருந்து பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் ஒருவரே சர்வவல்லமையுள்ளவர். மகத்துவமுள்ளவர். நித்தியானந்தமுள்ளவர். சாவாமையுள்ளவர். சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவர்.

தேவன் தமக்குப் பிரியமானவர்களை மாத்திரமே பரலோகத்திற்கு அழைத்துச் செல்கிறார். தமக்குப் பிரியமானவர்களுக்கு மாத்திரம், தம்முடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு அனுமதி கொடுக்கிறார். அவர் யாரும் சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவர். அவர் காணாக்கூடாதவராயிருக்கிறார். தேவனுடைய தெய்வீக மகிமையையும், அவருடைய பிரகாசத்தையும் நம்முடைய மனுஷக்கண்களால் காணமுடியாது. தேவனைக் கண்டவர் ஒருவரும் ஜீவனோடிருப்பதில்லை. அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக என்று பவுல் ஆசீர்வதிக்கிறார்.

பாவம் தேவனுக்கு விரோதமான பகை. நாம் பாவிகளாகயிருந்தாலும், ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிற நம்முடைய தேவன் நம்மை நோக்கிப் பார்க்கிறார். அவருடைய ஆளுகைக்குட்பட்டிருப்பது நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம்.

ஐசுவரியமுள்ளவர்கள்
1தீமோ 6 : 17-21

1தீமோ 6:17. இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும்.

1தீமோ 6:18. நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும்,

1தீமோ 6:19. நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு.

1தீமோ 6:20. ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு.

1தீமோ 6:21. சிலர் அதைப் பாராட்டி, விசுவாசத்தைவிட்டு வழுவிப் போனார்கள். கிருபையானது உன்னோடேகூட இருப்பதாக. ஆமென்.

தீமோத்தேயு ஐசுவரியமுள்ளவர்களுக்கு கட்டளை கொடுக்கவேண்டும். தங்களுக்கு வரப்போகிற சோதனைகளைக் குறித்து அவர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று, தீமோத்தேயு ஐசுவரியவான்களுக்குக் கட்டளையிட வேண்டும். ஐசுவரியமுள்ளவர்கள் தங்கள் ஐசுவரியத்தின் மூலமாய் நன்மை செய்யவேண்டுமென்றும், அவர்கள் நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாயிருக்கவேண்டும் என்றும் அவர்களுக்குப் புத்தி சொல்லவேண்டும்.

மேலும் ஐசுவரியமுள்ளவர்கள் தாராளமாய்க் கொடுக்கிறவர்களாகவும், உதாரகுணமுள்ளவர்களாயுமிருக்க வேண்டுமென்று அவர்களுக்குப் புத்திசொல்லவேண்டும்.

ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிருக்கக் கூடாது. நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கக்கூடாது. இவ்வுலகத்தின் ஐசுவரியம் நிலையற்றது. இந்தப் பிரபஞ்சத்தில் ஐசுவரியத்தைப்போல நிலையற்றது வேறு எதுவுமில்லை. ஒருவர் இன்று ஐசுவரியவானாகயிருப்பார். மறுநாளில் அவர் தன் ஐசுவரியத்தையெல்லாம் இழந்து தரித்திரராகிவிடுவார். எல்லா ஐசுவரியமும் அவரை விட்டு ஒரே நாளில் போய்விடும்.

ஐசுவரியவமுள்ளவர்கள் தேவன்மேல் நம்பிக்கை வைக்கவேண்டும். அவரே நாம் அனுபவிக்கிறதற்கு சகலவித நன்மைகளையும் நமக்கு சம்பூரணமாய்க் கொடுக்கிறவர். அவரே ஜீவனுள்ளவர். இப்பிரபஞ்சத்தில் ஏராளமானோர் ஐசுவரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களில் அநேகரால் தங்கள் ஐசுவரியத்தை அனுபவிக்க முடியவில்லை. ஐசுவரியத்தை செலுபண்ண வேண்டும் என்னும் இருதய சிந்தையும் அவர்களிடத்தில் காணப்படவில்லை. ஐசுவரியவான்கள் தங்களிடத்திலுள்ள ஐசுவரியங்களை நன்மை செய்வதற்கும், நற்கிரியைகளைச் செய்வதற்கும் பயன்படுத்தவேண்டும். தங்களிடத்திலுள்ள ஐசுவரியத்தினால் மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டும்.

உண்மையான ஐசுவரியமுள்ளவர்கள் நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகயிருப்பார்கள். நாம் எப்போது பார்த்தாலும் இப்பிரபஞ்சத்தின்மீதும், நிலையற்ற ஐசுவரியத்தின்மீதும் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கக்கூடாது. நாம் வரப்போகிற உலகத்தையும் நினைத்துப் பார்க்கவேண்டும். நாம் இம்மைக்காக மாத்திரம் ஜீவிக்காமல் மறுமையையும் நோக்கிப் பார்க்கவேண்டும்.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும்போதே பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு நம்மைத் தகுதிப் படுத்திக்கொள்ளவேண்டும். நித்திய ஜீவனைப்பற்றிக்கொள்ளும்படி வருங் காலத்திற்காக நமக்கு நல்ல ஆதாரத்தை பொக்கிஷமாக வைத்துக்கொள்ளவேண்டும் (1தீமோ 6:19).

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஐசுவரியமுள்ளவர்களாயிருப்பதற்கு பயப் படக்கூடாது. அதே வேளையில், நம்மிடத்தில் ஐசுவரியம் இருக்கும்போது இறுமாப்பான சிந்தையிருக்கக்கூடாது. நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நாம் நம்பிக்கை வைக்கக்கூடாது.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு ஒரு விசேஷித்த கட்டளையைக் கொடுக்கிறார். "ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொள்" (1தீமோ 6:20) என்று சொல்லுகிறார். இந்தக் கட்டளை கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நம் எல்லோருக்குமே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஊழியக்காரரிடத்திலும் கர்த்தர் தம்முடைய ஊழியத்தை பொறுப்பாக ஒப்புவித்திருக்கிறார். தேவனுடைய சத்தியங்கள், தேவனுடைய பிரமாணங்கள் ஆகியவை நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. நாம் இவற்றைக் காத்துக்கொள்ள வேண்டும். எழுதப்பட்டுள்ள வேதவாக்கியம் நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. வேதவசனத்தை நாம் காத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு சிலர் தங்களுடைய கல்வி அறிவையும், ஞானத்தையும் குறித்து பெருமைப்படுகிறார்கள். உலக கல்வி ஞானம் என்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிறது (1தீமோ 6:21). ஒருசிலர் இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைப்பதற்குப் பதிலாக, ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின்மீது விசுவாசம் வைக்கிறார்கள்.

1 தீமோத்தேயு - விரிவுரை
I TIMOTHY - COMMENTARY

தேவனுடைய வார்த்தையைப் பற்றிக்கொள்ளாமல், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையைப் பற்றிக்கொள்கிறார்கள். ஆகையினால்தான் நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நாம் காத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனை சொல்லும்போது "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொள்" என்று திரும்பத் திரும்ப சொல்லுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் நம்முடைய ஊழிய அழைப்புக்கு பாத்திரவான்களாக நடந்துகொள்ள வேண்டும். கர்த்தர் நம்மிடத்தில் ஊழியத்தைப் பொறுப்பாய் ஒப்புவித்திருக்கும்போது, நாம் அதைக் காத்துக்கொள்ளாமல், கர்த்தரை வஞ்சித்து விடக்கூடாது.

சுவிசேஷத்தின் சத்தியத்திற்கு விரோதமாயிருக்கிற ஞானம் "விஞ்ஞானம்" என்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிறது. நமக்கு கர்த்தரைப் பற்றும் விசுவாசமே பிரதானமாயிருக்கவேண்டும். விஞ்ஞானத்திற்குமேலாக தேவனுடைய வார்த்தையே நமக்குள் உயர்ந்திருக்க வேண்டும்.

விசுவாசத்திற்கு மேலாக ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையை உயர்த்துகிறவர்கள், விசுவாசத்தை விட்டு விலகிப்போய் விடுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகள் இப்படிப்பட்ட விபரீதங்களுக்கு விலகியிருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் ஜெபத்தோடும், அப்போஸ்தல ஆசீர்வாதத்தோடும் இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார். கிருபையானது மகிமைக்கு அச்சாரமாயிருக்கிறது. கிருபை மகிமையின் ஆரம்பம். தேவன் எங்கெல்லாம் கிருபை கொடுக்கிறாரோ, அங்கெல்லாம் அவர் தம்முடைய மகிமையையும் வெளிப்படுத்துகிறார். ஆகையினால்தான் பவுல் தீமோத்தேயுவை வாழ்த்தும்போது, "கிருபையானது உன்னோடேகூட இருப்பதாக, ஆமென்" (1தீமோ 6:21) என்று சொல்லி வாழ்த்துகிறார்.